பரமபதி துணை.

சனகாபுரம்

பவணந்திமுனிவர்

இயற்றிய

நன்னூல்.

இது

யாழ்ப்பாணத்து நல்லூர்

ஆறுமுகநாவலரவர்கள்

சிதம்பரசைவப்பிரகாசவித்தியாசாலைத்

தருமபரிபாலகர்

விசுவநாதபிள்ளையால்

சென்னபட்டணம்

வித்தியாநுபாலனயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

ஆறாம் பதிப்பு.

அக்ஷய௵ ஆனிமீ.

பரமபதி துணை.

நன்னூல்.

சிறப்புப்பாயிரம்.

மலர்தலை யுலகின் மல்கிரு ளகல
இலகொளி பரப்பி யாவையும் விளக்கும்
பரிதியி னொருதா னாகி முதலீ
றொப்பள வாசை முனிவிகந் துயர்ந்த
அற்புத மூர்த்திதன் னலர்தரு தன்மையின்
மனவிரு ளிரிய மாண்பொருண் முழுவதும்
முனிவற வருளிய மூவறு மொழியுளும்
குணகடல் குமரி குடகம் வேங்கடம்
எனுநான் கெல்லையி னிருந்தமிழ்க் கடலுள்
அரும்பொரு ளைந்தையும் யாவரு முணரத்
தொகைவகை விரியிற் றருகெனத் துன்னார்
இகலற நூறி யிருநில முழுவதும்
தனதெனக் கோலித் தன்மத வாரணம்
திசைதொறு நிறுவிய திறலுறு தொல்சீர்

கருங்கழல் வெண்குடைக் கார்நிகர் வண்கைத்
திருந்திய செங்கோற் சீய கங்கன்
அருங்கலை விநோத னமரா பரணன்
மொழிந்தன னாக முன்னோர் நூலின்
வழியே நன்னூற் பெயரின் வகுத்தனன்
பொன்மதிற் சனகைச் சன்மதி முனியருள்
பன்னருஞ் சிறப்பிற் பவணந்தி
என்னு நாமத் திருந்தவத் தோனே.

பொதுப்பாயிரம்.

[பாயிரத்தின் பெயர்கள்.]

க. முகவுரை பதிக மணிந்துரை நூன்முகம்
புறவுரை தந்துரை புனைந்துரை பாயிரம்.

[பாயிர வகை.]

உ. பாயிரம் பொதுச்சிறப் பெனவிரு பாற்றே.

[பொதுப்பாயிரம் இன்னதென்பது.]

ங. நூலே நுவல்வோ னுவலுந் திறனே
கொள்வோன் கோடற் கூற்றா மைந்தும்
எல்லா நூற்கு மிவைபொதுப் பாயிரம்.

க. நூலினது வரலாறு.

[நூல் இன்னதென்பது.]

ச. நூலி னியல்பே நுவலி னோரிரு
பாயிரந் தோற்றி மும்மையி னொன்றாய்
நாற்பொருட் பயத்தோ டெழுமதந் தழுவி
ஐயிரு குற்றமு மகற்றியம் மாட்சியோ
டெண்ணான் குத்தியி னோத்துப் படலம்
என்னு முறுப்பினிற் சூத்திரங் காண்டிகை
விருத்தி யாகும் விகற்பநடை பெறுமே.

[மூவகை நூல்]

ரு. முதல்வழி சார்பென நூன்மூன் றாகும்.

[முதனூல் இன்னதென்பது.]

சா. அவற்றுள்,
வினையி னீங்கி விளங்கிய வறிவின்
முனைவன் கண்டது முதனூ லாகும்.

[வழிநூல் இன்னதென்பது.]

எ. முன்னோர் நூலின் முடிபொருங் கொத்துப்
பின்னோன் வேண்டும் விகற்பங் கூறி
அழியா மரபினது வழிநூ லாகும்.

[சார்புநூல் இன்னதென்பது.]

அ. இருவர் நூற்கு மொருசிறை தொடங்கித்
திரிபு வேறுடையது புடைநூ லாகும்.

[வழிநூலுக்குஞ் சார்புநூலுக்கும்

எய்தியதன்மேற்சிறப்புவிதி.]

௯. முன்னோர் மொழிபொருளே யன்றி யவர்மொழியும், பொன்னேபோற்போற்றுவ மென்பதற்கும்—முன்னோரின், வேறு நூல் செய்துமெனு மேற்கோளி லென்பதற்கும், கூறுபழஞ் சூத்திரத்தின் கோள்.

[நூற்பொருட் பயன்.]

௧0. அறம்பொருளின்பம்வீ டடைதனூற்பயனே.

[எழுமதம்.]

௧௧. எழுவகை மதமே யுடன்படன் மறுத்தல்
பிறர்தம் மதமேற் கொண்டு களைவே
தாஅ னாட்டித் தனாது நிறுப்பே
இருவர் மாறுகோ ளொருதலை துணிவே
பிறர்நூற் குற்றங் காட்ட லேனைப்
பிறிதொடு படாஅன் றன்மதங் கொளலே.

[பத்துக்குற்றம்.]

௧௨. குன்றக் கூறன் மிகைபடக் கூறல்
கூறியது கூறன் மாறுகொளக் கூறல்
வழூஉச்சொற் புணர்த்தன் மயங்க வைத்தல்
வெற்றெனத் தொடுத்தன் மற்றொன்று விரித்தல்

சென்றுதேய்ந் திறுத னின்று பயனின்மை
என்றிவை யீரைங் குற்ற நூற்கே.

[பத்தழகு.]

கங. சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல்
நவின்றோர்க் கினிமை நன்மொழி புணர்த்தல்
ஓசை யுடைமை யாழமுடைத் தாதல்
முறையின் வைப்பே யுலக மலையாமை
விழுமியது பயத்தல் விளங்குதா ரணத்த
தாகுத னூலிற் கழகெனும் பத்தே.

[முப்பத்திரண்டுத்தி.]

கச. நுதலிப் புகுத லோத்துமுறை வைப்பே
தொகுத்துச் சுட்டல் வகுத்துக் காட்டல்
முடித்துக் காட்டன் முடிவிடங் கூறல்
தானெடுத்து மொழிதல் பிறன்கோட் கூறல்
சொற்பொருள் விரித்தறொடர்ச்சொற்புணர்த்தல்
இரட்டுற மொழித லேதுவின் முடித்தல்
ஒப்பின் முடித்தன் மாட்டெறிந் தொழுகல்
இறந்தது விலக்க லெதிரது போற்றல்
முன்மொழிந்து கோடல் பின்னது நிறுத்தல்
விகற்பத்தின் முடித்தன் முடிந்தது முடித்தல்
உரைத்து மென்ற லுரைத்தா மென்றல்
ஒருதலை துணித லெடுத்துக் காட்டல்
எடுத்த மொழியி னெய்த வைத்தல்

இன்ன தல்ல திதுவென மொழிதல்
எஞ்சிய சொல்லி னெய்தக் கூறல்
பிறநூன் முடிந்தது தானுடன் படுதல்
தன்குறி வழக்க மிகவெடுத் துரைத்தல்
சொல்லின் முடிவி னப்பொருண் முடித்தல்
ஒன்றின முடித்த றன்னின முடித்தல்
உய்த்துணர வைப்பென வுத்தியெண் ணான்கே.

[உத்தி இன்னதென்பது.]

கரு நூற்பொருள் வழக்கொடு வாய்ப்பக் காட்டி
ஏற்புழி யறிந்திதற் கிவ்வகை யாமெனத்
தகும்வகை செலுத்துத றந்திர வுத்தி.

[ஓத்து இன்னதென்பது.]

கசூ. நேரின மணியை நிரல்பட வைத்தாங்
கோரினப் பொருளை யொருவழி வைப்ப
தோத்தென மொழிப வுயர்மொழிப் புலவர்.

[படலம் இன்னதென்பது.]

கஎ. ஒருநெறி யின்றி விரவிய பொருளாற்
பொதுமொழி தொடரி னதுபடல மாகும்.

[சூத்திரம் இன்னதென்பது.]

கஅ. சில்வகை யெழுத்திற் பல்வகைப்பொருளைச்
செவ்வ னாடியிற் செறித்தினிது விளக்கித்
திட்ப நுட்பஞ் சிறந்தன சூத்திரம்.

[சூத்திர நிலை.]

௧௯. ஆற்றொழுக் கரிமா நோக்கந் தவளைப்
பாய்த்துப் பருந்தின்வீழ் வன்னசூத் திரநிலை.

[சூத்திரங்களுக்குக் காரணவகையால்வரும்
பெயர் வேறுபாடு.]

௨0. பிண்டந் தொகைவகை குறியே செய்கை
கொண்டியல் புறனடைக் கூற்றன சூத்திரம்.

[உரையினது பொதுவிலக்கணம்.]

௨௧. பாடங்கருத்தே சொல்வகை சொற்பொருள்
தொகுத்துரை யுதாரணம் வினாவிடை விசேடம்
விரிவதி காரந் துணிவு பயனோ
டாசிரிய வசனமென் றீரே ழுரையே.

[காண்டிகையுரை இன்னதென்பது.]

௨௨. கருத்துப் பதப்பொருள் காட்டு மூன்றினும்
அவற்றொடு வினாவிடை யாக்க லானும்
சூத்திரத் துட்பொரு டோற்றுவ காண்டிகை.

[விருத்தியுரை இன்னதென்பது.]

௨௩. சூத்திரத் துட்பொரு ளன்றியு மாண்டைக்
கின்றி யமையா யாவையும் விளங்கத்
தன்னுரை யானும் பிறநூ லானும்

ஐய மகலவைங் காண்டிகை யுறுப்பொடு
மெய்யினை யெஞ்சா திசைப்பது விருத்தி.

[நூலென்னும் பெயர்க்காரணம்.]

உச. பஞ்சிதன் சொல்லாப் பனுவ லிழையாகச்
செஞ்சொற் புலவனே சேயிழையா—எஞ்சாத
கையேவா யாகக் கதிரே மதியாக
மையிலா நூன்முடியு மாறு.

உரு. உரத்தின் வளம்பெருக்கி யுள்ளிய தீமைப்
புரத்தின் வளமுருக்கிப் பொல்லா—மரத்தின்
கனக்கோட்டந் தீர்க்குநூ லஃதேபோன் மாந்தர்
மனக்கோட்டந் தீர்க்குநூன் மாண்பு.

உ. ஆசிரியனது வரலாறு.

[நல்லாசிரிய ரிலக்கணம்.]

உகூ. குலனரு டெய்வங் கொள்கை மேன்மை
கலைபயி றெளிவு கட்டுரை வன்மை
நிலமலை நிறைகோன் மலர்நிகர் மாட்சியும்
உலகிய லறிவோ டுயர்குண மினையவும்
அமைபவ னூலுரை யாசிரி யன்னே.

உஎ. தெரிவரும் பெருமையுந் திண்மையும் பொ
றையும்

பருவ முயற்சி யளவிற் பயத்தலும்
மருவிய நன்னில மாண்டா கும்மே

உஅ. அளக்க லாகா வளவும் பொருளும்
துளக்க லாகா நிலையுந் தோற்றமும்
வறப்பினும் வளந்தரும் வண்மையு மலைக்கே.

உகூ. ஐயந் தீரப் பொருளை யுணர்த்தலும்
மெய்ந்நடு நிலையு மிகுநிறை கோற்கே.

௩0. மங்கல மாகி யின்றி யமையா
தியாவரு மகிழ்ந்து மேற்கொள மெல்கிப்
பொழுதின் முகமலர் வுடையது பூவே.

[ஆசிரியராகாதவ ரிலக்கணம்.]

௩க. மொழிகுண மின்மையு மிழிகுண வியல்பும்
அழுக்கா றவாவஞ்ச மச்ச மாடலும்
கழற்குட மடற்பனை பருத்திக் குண்டிகை
முடத்தெங் கொப்பென முரண்கொள் சிந்தையும்
உடையோ ரிலரா சிரியரா குதலே.

௩உ. பெய்தமுறை யன்றிப் பிறழ வுடன்றரும்
செய்தி கழற்பெய் குடத்தின் சீரே.

௩௩. தானே தரக்கொளி னன்றித் தன்பால்
மேவிக் கொளக்கொடா விடத்தது மடற்பனை.

௩ச. அரிதிற்பெயக்கொண்டப்பொருடான்பிறர்க்
கெளிதீ வில்லது பருத்திக் குண்டிகை.

௩௫. பல்வகை யுதவி வழிபடு பண்பின்
அல்லோர்க் களிக்கு மதுமுடத் தெங்கே.

௩. பாடஞ்சொல்லலின து வரலாறு.

௩௬. ஈத லியல்பே யியம்புங் காலைக்
காலமு மிடனும் வாலிதி னோக்கிச்
சிறந்துழி யிருந்துதன் றெய்வம் வாழ்த்தி
உரைக்கப் படும்பொரு ளுள்ளத் தமைத்து
விரையான் வெகுளான் விரும்பி முகமலர்ந்து
கொள்வோன்கொள்வகையறிந்தவ னுளங்கொளக்
கோட்டமின் மனத்தினூல் கொடுத்த லென்ப.

௪. மாணுக்கனது வரலாறு.

[மாணுக்க ரிலக்கணம்.]

௩௭. தன்மக னாசான் மகனே மன்மகன்
பொருணனி கொடுப்போன் வழிபடு வோனே
உரைகோ ளாளற் குரைப்பது நூலே.

௩௮. அன்ன மாவே மண்ணொடு கிளியே
இல்லிக் குடமா டெருமை நெய்யரி
அன்னர் தலையிடை கடைமா ணுக்கர்.

[மாணாக்கராகாதவரிலக்கணம்.]

கக. களிமடி மானி காமி கள்வன்
பிணிய னேழை பிணக்கன் சினத்தன்
துயில்வோன் மந்தன் றொன்னூற் கஞ்சித்
தடுமா றுளத்தன் றறுகணன் பாவி
படிறனின் னோர்க்குப் பகரார் நூலே.

ரு. பாடங்கேட்டலின் வரலாறு.

சுo. கோடன் மரபே கூறுங் காலைப்
பொழுதொடு சென்று வழிபடன் முனியான்
குணத்தொடு பழகி யவன்குறிப் பிற்சார்ந்
திருவென விருந்து சொல்லெனச் சொல்லிப்
பருகுவ னன்னவார் வத்த னாகிச்
சித்திரப் பாவையி னத்தக வடங்கிச்
செவிவா யாக நெஞ்சுகள னாகக்
கேட்டவை கேட்டவை விடாதுளத் தமைத்துப்
போவெனப் போத லென்மனார் புலவர்.

சக. நூல்பயி லியல்பே நூவலின் வழக்கறிதல்
பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல்
ஆசாற் சார்ந்தவை யமைவரக் கேட்டல்
அம்மாண் புடையோர் தம்மொடு பயிறல்
வினாதல் வினாயவை விடுத்த லென்றிவை
கடனாக் கொளினே மடநனி யிகக்கும்.

சஉ. ஒருகுறி கேட்போ னிருகாற் கேட்பிற்
பெருக நூலிற் பிழைபா டிலனே.

சங. முக்காற் கேட்பின் முறையறிந்துரைக்கும்.

சச. ஆசா னுரைத்த தமைவரக் கொளினும்
காற்கூ றல்லது பற்றல னாகும்.

சரு. அவ்வினை யாளரொடு பயில்வகை யொருகாற்
செவ்விதி னுரைப்ப வவ்விரு காலும்
மையறு புலமை மாண்புடைத் தாகும்.

சசு. அழலி னீங்கா னணுகா னஞ்சி
நிழலி னீங்கா னிறைந்த நெஞ்சமோ
டெத்திறத் தாசா னுவக்கு மத்திறம்
அறத்திற் றிரியாப் படர்ச்சிவழி பாடே.

பொதுப்பாயிரமுற்றிற்று.

சிறப்புப்பாயிரத்திலக்கணம்

[சிறப்புப் பாயிரத்துக்குப் பொதுவிதி.]

சஎ. ஆக்கியோன் பெயரே வழியே யெல்லை
நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே
கேட்போர் பயனோ டாயெண் பொருளும்
வாய்ப்பக் காட்டல் பாயிரத் தியல்பே.

சஅ. காலங் களனே காரண மென்றிம்
மூவகை யேற்றி மொழிநரு முளரே.

[நூற்பெயருக்குச் சிறப்புவிதி.]

சகூ. முதனூல் கருத்த னளவு மிகுதி [ம்
பொருள்செய் வித்தோன் றன்மைமுதனிமித்தினு
இடுகுறி யானுநூற் கெய்தும் பெயரே.

[வழியின்வகையாகியநூல்யாப்புக்குச்
சிறப்புவிதி.]

ருO. தொகுத்தல் விரித்த றொகைவிரி மொழி
பெயர்ப்
பெனத்தகு நூல்யாப் பீரிரண் டென்ப.

[சிறப்புப்பாயிரஞ்செய்தற்குரியார்
இவரேன்பது.]

ருக. தன்னா சிரியன் றன்னொடு கற்றோன்
தன்மா ணாக்கன் றகுமுறை காரரெனன்
றின்னோர் பாயிர மியம்புதல் கடனே.

[சிறப்புப்பாயிரம் பிறர் செய்தற்குக்
காரணம்.]

ருஉ. தோன்றா தோற்றித் துறைபலமுடிப்பினும்
தான்றற் புகழ்த றகுதி யன்றே.

[தற்புகழ்ச்சி குற்றமாகா இடங்கள்]

ருங. மன்னுடை மன்றத் தோலைத் தூக்கினும்
தன்னுடை யாற்ற லுணரா ரிடையினும்

மன்னிய வவையிடை வெல்லுறு பொழுதினும்
தன்னை மறுதலை பழித்த காலையும்
தன்னைப் புகழ்தலுந் தகும் புலவோற்கே.

[பாயிரம் நூலுக்கு இன்றியமையாச்
சிறப்பினதென்பது.]

ருச. ஆயிர முகத்தா னகன்ற தாயினும்
பாயிர மில்லது பனுவ லன்றே.

ருரு. மாடக்குச் சித்திரமு மாநகர்க்குக் கோபுர
முமாடமைத்தோளல்லார்க்கணியும்போல்—
நாடிமுன், ஐதுரையா நின்ற வணிந்துரையை
யென்னூற்கும்,பெய்துரையாவைத்தார் பெரிது.

சிறப்புப்பாயிரத்திலக்கணமுற்றிற்று.

முதலாவது

எழுத்ததிகாரம்.

௧. எழுத்தியல்.

[கடவுள் வணக்கமும் அதிகாரமும்.]

௫௬. பூமலி யசோகின் புனைநிழ லமர்ந்த
நான்முகற் றொழுது நன் கியம்புவ னெழுத்தே.

[எழுத்திலக்கணத்தின் பகுதி.]

௫௭. எண்பெயர் முறைபிறப் புருவ மாத்திரை
முதலீ றிடைநிலை போலி யென்றா
பதம்புணர் பெனப்பன் னிருபாற் றதுவே.

௧. எண்.

[எழுத்து இன்னதென்பதும் அதன்வகையும்.]

௫௮. மொழிமுதற் காரண மாமணுத் திரளொலி
எழுத்தது முதல்சார் பெனவிரு வகைத்தே.

[முதலெழுத்தின் விரி.]

ருகூ. உயிரு முடம்புமா முப்பது முதலே.

[சார்பெழுத்தின் வகை]

கூ0. உயிர்மெய் யாய்த முயிரள பொற்றள
பஃகிய இஉ ஐஔ மஃகான்
தனிநிலை பத்துஞ் சார்பெழுத் தாகும்.

[சார்பெழுத்தின் விரி.]

கூக. உயிர்மெய் யிரட்டுநூற் றெட்டுய ராய்தம்
எட்டுயி ரளபெழு மூன்றொற் றளபெடை
ஆறே ழஃகு மிம்முப் பானேழ்
உகர மாறு றைகான் மூன்றே
ஔகா னொன்றே மஃகான் மூன்றே
ஆய்த மிரண்டொடு சார்பெழுத் துறுவிரி
ஒன்றொழி முந்நூற் றெழுபா னென்ப.

உ. பெயர்.

[பெயர்க்கெல்லாம் பொதுவிலக்கணம்.]

கூஉ. இடுகுறி காரணப் பெயர்பொதுச்சிறப்பின.

[எழுத்தின்பெயர்.]

கூந. அம்முத லீரா றாவி கம்முதன்
மெய்ம்மூ வாறென விளம்பினர் புலவர்.

௬௪. அவற்றுள்,
அ இ உ எ ஒக்குறி லைந்தே.

௬௫. ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ நெடில்.

௬௬. அ இ உம்முதற் றனிவரிற் சுட்டே.

௬௭. எ யா முதலும் ஆ ஓ வீற்றும்
ஏயிரு வழியும் வினுவா கும்மே.

௬௮. வல்லினங் கசட தபறவென வாறே.

௬௯. மெல்லினம் ஙஞண நமன வெனவாறே.

௭௰. இடையினம் ய ர ல வ ழ ள வெனவாறே.

[இனவெழுத்து.]

௭௧. ஐஔ இ உச் செறிய முதலெழுத்
திவ்விரண் டோரின மாய்வரன் முறையே.

[இனமென்றதற்குக் காரணம்.]

௭௨. தான முயற்சி யளவு பொருள்வடி
வானவொன் றுதியோர் புடையொப் பினமே.

௩. முறை.

௭௩. சிறப்பினு மினத்தினுஞ் செறிந்தீண் டம்
நடத்த ருனே முறையா கும்மே. [முதல்

௪. பிறப்பு.

[பிறப்பின் போதுவிதி.]

எச. நிறையுயிர் முயற்சியி னுள்வளி துரப்ப
எழுமணுத் திரளுரங் கண்டமுச்சி
மூக்குற் றிதழ்நாப் பல்லணத் தொழிலின்
வெவ்வே றெழுத்தொலி யாய்வரல் பிறப்பே.

[முதலெழுத்துக்களுக்கு இடப்பிறப்பு.]

எரு. அவ்வழி,
ஆவி யிடைமை யிடமிட றாகும்
மேவு மென்மைமூக் குரம்பெறும் வன்மை.

[முதலெழுத்துக்களுக்கு முயற்சிப்பிறப்பு.]

எசா. அவற்றுள்,
முயற்சியுள் அஆ வங்காப் புடைய.

எஎ. இ ஈ எ ஏ ஐ யங்காப்போ
டண்பன் முதனா விளிம்புற வருமே.

எஅ. உ ஊ ஒ ஓ ஔ விதழ் குவிவே.

எகூ. கஙவுஞ் சஞவும் டணவு முதலிடை
நுனிநா வண்ண முறமுறை வருமே.

அ0. அண்பல் லடிநா முடியுறத் தநவரும்.

அக. மீகீ ழிதழுறப் பம்மப் பிறக்கும்.

அஉ. அடிநா வடியணை முறயத் தோன்றும்.

அங. அண்ண நுனிநா வருட ரழவரும்.

அச. அண்பன் முதலு மண்ணமு முறையின்
நாவிளிம்பு வீங்கி யொற்றவும் வருடவும்
லகார ளகாரமா யிரண்டும் பிறக்கும்.

அரு. மேற்பல் விதழுற மேவிடும் வவ்வே.

அசு. அண்ண நுனிநா நனியுறிற் றனவரும்.

[சார்பெழுத்துக்கு இடமுயற்சி.]

அஎ. ஆய்தக் கிடந்தலை யங்கா முயற்சி
சார்பெழுத் தேனவுந் தம்முத லனைய.

[பிறப்புக்குப் புறனடை.]

அஅ. எடுத்தல் படுத்த னலித லுழப்பில்
திரிபுந் தத்தமிற் சிறிதுள வாகும்.

[உயிர்மெய்.]

அகூ. புள்ளிவிட் டவ்வொடு முன்னுரு வாகியும்
ஏனை யுயிரோ டுருவு திரிந்தும்
உயிரள வாயதன் வடிவொழித் திருவயிற்
பெயரொடு மொற்றுமுன் னாய்வரு முயிர்மெய்.

[முற்றாய்தம்.]

கூ0. குறியதன் முன்ன ராய்தப் புள்ளி
உயிரொடு புணர்ந்தவல் லாறன் மிசைத்தே.

[உயிரளபெடை.]

௬௧. இசைகெடின் மொழிமுத லிடைகடை நிலை
நெடில்
அளபெழு மவற்றவற் றினக்குறில் குறியே.

[ஒற்றளபெடை.]

௬௨. ஙஞண நமன வயலள வாய்தம்
அளபாங் குறிலிணை குறிற்கீ ழிடைகடை
மிகலே யவற்றின் குறியாம் வேறே.

[குற்றியலிகரம்.]

௬௩. யகரம் வரக்குற ளுத்திரி யிகரமும்
அசைச்சொன் மியாவி னிகரமுங் குறிய.

[குற்றியலுகரம்.]

௬௪. நெடிலோ டாய்த முயிர்வலி மெலியிடைத்
தொடர்மொழி யிறுதி வன்மை யூருகரம்
அஃகும் பிறமேற் றொடரவும் பெறுமே.

[ஐகார ஒளகாரக் குறுக்கங்கள்.]

௬௫. தற்சுட் டளபொழி யைம்மூ வழியும்
நையு மௌவு முதலற் றாகும்.

[மகரக்குறுக்கம்.]

௬௬. ணனமுன்னும் வஃகான் மிசையுமக் குறு
கும்.

[ஆய்தக்குறுக்கம்.]

கூஎ. லளவீற் றியைபினு மாய்த மஃகும்.

ரு. உருவம்.

கூஅ. தொல்லை வடிவினவெல்லாவெழுத்துமாண்
டெய்து மெகர வொகரமெய் புள்ளி.

சு. மாத்திரை.

[எழுத்துக்களின் மாத்திரை.]

கூகூ. மூன்றுயி ரளபிரண் டாநெடி லொன்றே
குறிலோ டையெளக் குறுக்க மொற்றள
பரையொற் றிஉக் குறுக்க மாய்தங்
கால்குறண் மஃகா னய்த மாத்திரை.

[மாத்திரை இன்னதென்பது.]

க00. இயல் பெழுமாந்த ரிமைநொடி மாத்திரை.

[மாத்திரைக்குப் புறனடை.]

க0க. ஆவியு மொற்று மளவிறந் திசைத்தலும்
மேவு மிசைவிளி பண்டமாற் றாதியின்.

எ. முதனிலை.

[மொழிக்கு முதலில்வரும் எழுத்துக்கள்.]

க0உ. பன்னீ ருயிருங் கசதந பமவய
ஞங வீ ரைந்துயிர் மெய்யு மொழிமுதல்.

[பொதுவிதியுட் சிறப்புவிதி.]

க0௩. உ ஊ ஒ ஓ வலவொடு வம்முதல்.

க0ச. அ ஆ உ ஊ ஓ ஔ யம்முதல்.

க0ரு. அ ஆ எ ஒவ்வோ டாகு ஞம்முதல்.

க0சு. சுட்டியா வெகர வினுவழி யவ்வை
ஒட்டி ஙவ்வு முதலா குமே.

அ. இறுதிநிலை.

[மொழிக்கிறுதியில் வரும் எழுத்துக்கள்.]

கOஎ. ஆவி ஞணநமன யரலவ ழளமெய்
சாயு முகரநா லாறு மீறே.

[சிலவற்றிற்குச் சிறப்புவிதி.]

கOஅ. குற்றுயி ரளபி னீறு மெகர
மெய்யொடே லாதொந் நவ்வொ டாமௌக்
ககர வகரமோ டாகு மென்ப.

[எழுத்தினது முதலும் ஈறும்.]

க0௯. நின்றநெறி யேயுயிர் மெய்முத லீறே.

௯. இடைநிலைமயக்கம்.

கக0. கசதப வொழித்தவீ ரேழன் கூட்டம்
மெய்ம்மயக் குடனிலை ரழவொழித் தீரெட்
டாகுமிவ் விருபான் மயக்கு மொழியிடை
மேவு முயிர்மெய் மயக்கள வின்றே.

[வேற்றுநிலை மெய்ம்மயக்கத்திற்குச் சிறப்புவிதி.]

கக௧. ஙம்முன் கவ்வாம் வம்முன் யவ்வே.

கக௨. ஞநமுன் றம்மினம் யகரமொ டாகும்.

கக௩. டறமுன் கசப மெய்யுடன் மயங்கும்.

கக௪. ணனமுன் னினங்கச ஞபமய வவ்வரும்.

கக௫. மம்முன் பயவ மயங்கு மென்ப.

கக௬. யரழ முன்னர் மொழிமுதன் மெய்வரும்.

ககஎ. லளமுன் கசப வயவொன் றும்மே.

[உடனிலை மெய்ம்மயக்கத்தின் சிறப்புவிதி.]

கக௮. ரழவல்லன தம்முற் றாமுட னிலையும்.

[தனிமெய்யுடன் தனிமெய்யாய் மயங்குவன இவை மொழிக்கு உறுப்பாக மயங்காதன இவை.]

கக௯. யரழவொற்றின்முன் கசதப ஙஞநம
ஈரொற் றாம்ரழத் தனிக்குறி லணையா.

[செய்யுளில் ஈரொற்றுய்நிற்கும் எழுத்துக்கள்.]

கஉ௦. ளளமெய் திரிந்த னணமுன் மகாரம்
னைந்தீ ரொற்றாஞ் செய்யு ளுள்ளே.

[முதனிலைஇறுதிநிலைஇடைநிலைகளுக்குப்புறனடை.]

கஉக. தம்பெயர் மொழியின் முதலு மயக்கமும்
இம்முறை மாறியு மியலு மென்ப.

க௦. போலி.

[மொழியிறுதிப்போலி.]

கஉஉ. மகர விறுதி யஃறிணைப் பெயரின்
னகரமோ டுறழா நடப்பன வுளவே.

[மொழிமுதற்போலியும்மொழியிடைப்போலியும்.]

கஉ௩. அ ஐ முதலிடை யொக்குஞ் சஞயமுன்.

[மொழியிடைப்போலி.]

கஉச. ஐகான் யவ்வழி நவ்வொடு சில்வழி
ஞஃகா னுறழு மென்மரு முளரே.

சந்தியக்கரம்.

கஉரு. அம்மு னிகரம் யகர மென்றிவை
எய்தி னையொத் திசைக்கு மவ்வோ
டுவ்வும் வவ்வு மௌவோ ரன்ன.

எழுத்தின் சாரியைகள்.

கஉகூ. மெய்க ளகரமு நெட்டுயிர் காரமும்
ஐயௌக் கானு மிருமைக் குறிலிவ்
விரண்டொடு கரமுமாஞ் சாரியை பெறும்பிற.

இவ்வியலுக்குப்புறனடை.

கஉஎ. மொழியாய்த் தொடரினு முன்னனைத்
தெழுத்தே.

எழுத்தியன்முற்றிற்று.

உ. பதவியல்.

பதம்.

[பதம் இன்னதென்பதும் அதன்வகையும்.]

கஉஅ. எழுத்தே தனித்துந் தொடர்ந்தும் பொ
ருடரிற்
பதமா மதுபகாப் பதம்பகு பதமென
இருபா லாகி இயலு மென்ப.

[ஓரெழுத்தொருமொழி.]

கஉகூ. உயிர்மவி லாறுந் தபநவி லைந்தும்
கவசவி னாலும் யவ்வி லொன்றும்

ஆகு நெடிலொது வாங்குறி லிரண்டோ
டோரெழுத் தியல்பத மாறேழ் சிறப்பின.

[தொடரெழுத்தொருமொழி.]

கங0. பகாப்பத மேழும் பகுபத மொன்பதும்
எழுத்தீ ருகத் தொடரு மென்ப.

[பகாப்பதம்.]

கஙக. பகுப்பாற் பயனற் றிடுகுறி யாகி
முன்னே யொன்ருய் முடிந்தியல் கின்ற
பெயர்வினை யிடையுரி நான்கும் பகாப்பதம்.

[பகுபதம்.]

கஙஉ. பொருளிடங்காலஞ்சினைகுணந்தொழிலின்
வருபெயர் பொழுதுகொள் வினைபகு பதமே.

[பகுபதவுறுப்புக்கள்.]

கஙங. பகுதி விகுதி யிடைநிலை சாரியை
சந்தி விகார மாறினு மேற்பவை
முன்னிப் புணர்ப்ப முடியுமெப் பதங்களும்.

ப கு தி.

[பகுதி இன்னவென்பது.]

கஙச. தத்தம்,
பகாப்ப தங்களே பகுதி யாகும்.

[பண்புப்பகுதிக்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி.]

கங௫. செம்மை சிறுமை சேய்மை தீமை
வெம்மை புதுமை மென்மை மேன்மை
திண்மை யுண்மை நுண்மை யிவற்றெதிர்
இன்னவும் பண்பிற் பகாநிலைப் பதமே.

கங௬. ஈறு போத லிடையுகர மிய்யாதல்
ஆதி நீட லடியகர மையாதல்
தன்னொற் றிரட்டன் முன்னின்ற மெய்திரிதல்
இனமிக லினையவும் பண்பிற் கியல்பே.

[தெரிநிலைவினைப்பகுதிக்கு எய்தியதன்மேற்
சிறப்புவிதி.]

கங௭. நடவா மடிசீ விடுகூ வேவை
நொப்போ வெளவுரி ஞுண்பொருந் திருந்தின்
தேய்பார் செல்வவ் வாழ்கே ளஃகென்
றெய்திய விருபான் மூன்ரு மீற்றவும்
செய்யெ னேவல் வினைப்பகாப் பதமே.

[ஏவற்பகுதிக்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி.]

கங௮. செய்யென் வினைவழி விப்பி தனிவரிற்
செய்வியென் னேவ லிணையினீ ரேவல்.

[வினைப்பகுதிக்குப் புறனடை.]

கங௯. விளம்பிய பகுதிவே ருதலும் விதியே.

விகுதி.

கச0. அன் ஆன் அள் ஆள் அர் ஆர் பம் மார்
அஆ குடு துறு என் ஏன் அல் அன்
அம் ஆம் எம் ஏம் ஓமொ டும்மூர்
கடதற ஐஆய் இம்மின் இர்ஈர்
ஈயர் கயவு மென்பவும் பிறவும்
வினையின் விகுதி பெயரினுஞ் சிலவே.

இடைநிலை.

[பெயரிடைநிலை.]

கசக. இலக்கியங் கண்டதற் கிலக்கணமியம்பலிற்
பகுதி விகுதி பகுத்திடை நின்றதை
வினைப்பெய ரல்பெயர்க் கிடைநிலை யெனலே.

[இறந்தகால வினையிடைநிலை.]

கசஉ. தடறவொற் றின்னே யைம்பான்மூவிடத்
திறந்த காலந் தருந்தொழி லிடைநிலை.

[நிகழ்காலவிடைநிலை.]

கசங. ஆநின்று கின்று கிறுமூ விடத்தின்
ஐம்பா னிகழ்பொழு தறைவினை யிடைநிலை.

[எதிர்காலவிடைநிலை.]

கசச. பவ்வ மூவிடத் தைம்பா லெதிர்பொழு
திசைவினை யிடைநிலை யாமிவை சிலவில.

[காலங்காட்டுர்வ்த்தி.]

கசரு. றவ்வொ டுகர வும்மைநிகழ் பல்லவும்
தவ்வொ டிறப்பு மெதிர்வும் டவ்வொடு
கழிவுங் கவ்வோ டெதிர்வுமின் னேவல்
வியங்கோ ளிம்மாரெதிர்வும் பாந்தஞ்
செலவொடு வரவுஞ் செய்யுநிகழ் பெதிர்வும்
எதிர்மறை மும்மையு மேற்கு மீங்கே.

வடமொழியாக்கம்.

[ஆரியமொழி தமிழில் வடமொழியாதல்.]

கசசூ. இடையி னான்கு மீற்றி லிரண்டும்
அல்லா வச்சை வருக்க முதலீறி
யவ்வாதி நான்மை ளவ்வாகு மையைம்
பொதுவெழுத் தொழிந்தநா லேழுந் திரியும்.

[ஆரியமொழி வடமொழியாதற்குச் சிறப்புவிதி.]

கசஎ. அவற்றுள்,
ஏழா முயிரிய்யு மிருவுமை வருக்கத்
திடையின் மூன்று மவ்வம் முதலும்
எட்டே யவ்வு முப்பது சயவும்
மேலொன்று சடவு மிரண்டு சதவும்

மூன்றே யகவு மைந்திரு கவ்வும்
ஆவீ றையு மீயீ றிகரமும்.

௧௪௮. ரவ்விற் கம்முத லாமுக் குறிலும்
லவ்விற் கிம்முத லிரண்டும் யவ்விற்
கிய்யு மொழிமுத லாகிமுன் வருமே.

௧௪௯. இணைந்தியல் காலை யரலக் கிகரமும்
மவ்வக் குகரமு நகரக் ககரமும்
மிசைவரும் ரவ்வழி யுவ்வு மாம்பிற.

[தமிழெழுத்திற் சிறப்பெழுத்தும்
பொதுவெழுத்தும்.]

௧௫௦. றனழ எ ஒவ்வு முயிர்மெய்யு முயிரள
பல்லாச் சார்புந் தமிழ்பிற பொதுவே.

பதவியன்முற்றிற்று.

௩. உயிரீற்றுப்புணரியல்.

புணர்ச்சி.

[புணர்ச்சி இன்னதென்பது]

௧௫௧. மெய்யுயிர் முதலீ றாமிரு பதங்களும்
தன்னொடும் பிறிதொடு மல்வழி வேற்றுமைப்
பொருளிற் பொருந்துழி நிலைவரு மொழிகள்
இயல்பொடு விகாரத் தியைவது புணர்ப்பே.

[அல்வழி வேற்றுமை இவையென்பது.]

௧௫௨. வேற்றுமை யைம்முத லாறு மல்வழி
தொழில்பண் புவமை யும்மை யன்மொழி
எழுவாய் விளியீ ரெச்சமுற் றிடையுரி
தழுவு தொடரடுக் கெனவீ ரேழே.

[இயல்பு புணர்ச்சி.]

௧௫௩. விகார மனைத்து மேவல தியல்பே.

[விகாரப் புணர்ச்சி.]

௧௫௪. தோன்ற றிரிதல் கெடுதல் விகாரம்
மூன்று மொழிமூ விடத்து மாகும்.

[செய்யுள் விகாரம்.]

௧௫௫. வலித்தன் மெலித்த னீட்டல் குறுக்கல்
விரித்தறொகுத்தலும் வருஞ்செய்யுள்வேண்டுழி.

௧௫௬. ஒருமொழிமூவழிக் குறைதலுமனைத்தே.

[புணர்ச்சிவிகாரத்தில் வருவதோரையம்
ஒழித்தல்.]

௧௫௭. ஒருபுணர்க்கிரண்டு மூன்று முறப்பெறும்.

பொதுப் புணர்ச்சி.

[எல்லாவீற்றின் முன்னும் மெல்லினமும்
இடையினமும் புணர்தல்.]

கருஅ. எண்மூவெழுத்தீற்றெவ்வகைமொழிக்கும்
முன்வரு ஞநமய வக்க ளியல்பும்
குறில்வழி யத்தனி யைந்நொது முன்மெலி
மிகலுமாம் ணளனல வழிநத் திரியும்.

[பொதுப்பெயருயர்திணைப்பெயரீறு.]

கருகூ. பொதுப்பெய ருயர்திணைப்பெயர்களீற்று
மெய்
வலிவரி னியல்பா மாவி யரழுன்
வன்மை மிகாசில விகாரமா முயர்திணை.

[வினைப்பெயர் விளிப்பெயர்முன் வல்லினம்.]

கசூ0. ஈற்றியா வினாவிளிப் பெயர்முன்வலி
யியல்பே.

[முன்னிலைவினை ஏவல்வினைமுன் வல்லினம்.]

கசூக. ஆவி யரழ விறுதிமுன் னிலைவினை
ஏவன்முன் வல்லின மியல்பொடு விகற்பே.

உயிரீற்றுச் சிறப்புப் புணர்ச்சி.

[உயிர்முன் உயிர் புணர்தல்.

௧௬௨. இ ஈ ஐவழி யவ்வு மேனை
உயிர்வழி வவ்வு மேமுனிவ் விருமையும்
உயிர்வரி னுடம்படு மெய்யென் றாகும்.

[வினாச்சுட்டின்முன் நாற்கணமும் புணர்தல்.]

௧௬௩. எகர வினாமுச் சுட்டின் முன்னர்
உயிரும் யகரமும் மெய்யின் வவ்வும்
பிறவரி னவையுந் தூக்கிற் சுட்டு
நீளின் யகரமுந் தோன்றுத னெறியே.

[குற்றியலுகரமுன்னுஞ் சில முற்றியலுகரமுன்னும்
உயிரும் யகரமும் புணர்தல்.]

௧௬௪. உயிர்வரி னுக்குறண் மெய்விட் டோடும்
யவ்வரி னிய்யா முற்றுமற் றொரோவழி.

உயிரீற்றுமுன் வல்லினம்.

[உயிரீற்றின் முன் வல்லினம் புணர்தல்.]

௧௬௫. இயல்பினும் விதியினு நின்ற வுயிர்முன்
க ச த ப மிகும்வித வாதன மன்னே.

உயிரீற்றுச்சிலமரப்பெயர்முன்வல்லினம்புணர்தல்.

௧௬௬. மரப்பெயர் முன்ன ரினமெல் லெழுத்து
வரப்பெறு னவுமுள வேற்றுமை வழியே.

அகரவீற்றுச் சிறப்புவிதி.

௧௬௭. செய்யிய வென்னும் வினையெச்சம் பல்வகைப்
பெயரி னெச்சமுற் றுற னுருபே
அஃறிணைப் பன்மை யம்மமுன் னியல்பே.

௧௬௮. வாழிய வென்பத னீற்றி னுயிர்மெய்
யகலு முரித்தஃ தேகினு மியல்பே.

௧௬௯. சாவவென் மொழியீற் றுயிர்மெய் சாதலும்விதி.

௧௭௦. பலசில வெனுமிவை தம்முன் றாம்வரின்
இயல்பு மிகலு மகர மேக
லகரம் றகர மாகலும் பிறவரின்
அகரம் விகற்ப மாகலு முளபிற.

ஆகாரவீற்றுச் சிறப்புவிதி.

௧௭௧. அல்வழி யாமா மியாமுற்று முன்மிகா.

௧௭௨. குறியதன் கீழாக் குறுகலு மதனோ
டுகர மேற்றலு மியல்புமாந் தூக்கின்.

இகரவீற்றுச் சிறப்புவிதி.

௧௭௩. அன்றி யின்றியென் வினையெஞ் சிகரம்
தொடர்பினு ளுகர மாய்வரி னியல்பே.

௧எச. உரிவரி னுழியி னீற்றுயிர் மெய்கெட
மருவும் டகர முரியின் வழியே
யகர வுயிர்மெய்யா மேற்பன வரினே.

௧எரு. சுவைப்புளி முன்னின மென்மையுந் தோ
ன்றும்.

இகர ஐகாரவீற்றுச் சிறப்புவிதி.

௧எசு. அல்வழி இஐம் முன்ன ராயின்
இயல்பு மிகலும் விகற்பமு மாகும்.

ஈகாரவீற்றுச் சிறப்புவிதி.

௧எஎ. ஆமுன் பகரவீ யனைத்தும் வரக்குறுகும்
மேலன வல்வழி யியல்பா கும்மே.

௧எஅ. பவ்வீ நீமீ முன்ன ரல்வழி
இயல்பாம் வலிமெலி மிகலுமா மீக்கே.

முற்றுகரவீற்றுச் சிறப்புவிதி.

௧எகூ. மூன்று றுருபெண் வினைத்தொகை சுட்டீ
றாகு முகர முன்ன ரியல்பாம்.

௧அ௦. அதுமுன் வருமன் றுன்றுந் தூக்கின்.

குற்றுகரவீற்றுச் சிறப்புவிதி.

௧௮௧. வன்றொட ரல்லன முன்மிகா வல்வழி.

௧௮௨. இடைத்தொட ராய்தத் தொடரொற் றிடையின்
மிகாநெடி லுயிர்த்தொடர் முன்மிகா வேற்றுமை.

௧௮௩. நெடிலோ டுயிர்த்தொடர்க் குற்றுக ரங்க
டறவொற் றிரட்டும் வேற்றுமை மிகவே. [ளுட்

௧௮௪. மென்றொடர் மொழியுட் சிலவேற் றுமை
றம்மின வன்றொட ராகா மன்னே. [யிற்

௧௮௫. ஐயீற் றுடைக்குற் றுகரமு முளவே.

௧௮௬. திசையொடு திசையும் பிறவுஞ் சேரின்
நிலையீற் றுயிர்மெய் கவ்வொற்று நீங்கலும்
றகரம் னலவாத் திரிதலு மாம்பிற.

௧௮௭. தெங்குநீண் டீற்றுயிர் மெய்கெடுங் காய்வரின்.

௧௮௮. எண்ணிறை யளவும் பிறவு மெய்தின்
ஒன்று முதலெட் டீறு மெண்ணுண்
முதலீ ரெண்முத னீளு மூன்று
றேழ்குறு கும்மா றேழல் லவற்றின்
ஈற்றுயிர் மெய்யு மேழ னுயிரும்
ஏகு மேற்புழி யென்மனார் புலவர்.

கஅகூ. ஒன்றன் புள்ளி ரகர மாக
இரண்ட னொற்றுயி ரேகவுவ் வருமே.

ககூ0. மூன்றனுறுப் பழிவும் வந்தது மாகும்.

ககூக. நான்கன் மெய்யே லறவா கும்மே.

ககூஉ. ஐந்தனொற் றடைவது மினமுங் கேடும்.

ககூங. எட்ட னுடம்புணவ் வாகு மென்ப.

ககூச. ஒன்பா னொடுபத்து நூறு மொன்றின்
முன்னதி னேனைய முரணி யொவ்வொடு
தகர நிறீஇப்பஃ தகற்றி னவ்வை
நிரலே ணளவாத் திரிப்பது நெறியே.

ககூரு. முதலிரு நான்கா மெண்முனர்ப் பத்தின்
இடையொற் றேக லாய்த மாகல்
எனவிரு விதியு மேற்கு மென்ப.

ககூசு. ஒருபஃ தாதிமுன் னொன்றுமுத லொன்
எண்ணு மவையூர் பிறவு மெய்யின் [பான்
ஆய்த மழியவாண் டாகுந் தவ்வே.

ககூஎ. ஒன்றுமுத லீரைந் தாயிரங் கோடி
எண்ணிறை யளவும் பிறவரிற் பத்தின்
ஈற்றுயிர் மெய்கெடுத் தின்னு மிற்றும்
ஏற்ப தேற்கு மொன்பது மினைத்தே.

௧௯அ. இரண்டு முன்வரிற் பத்தினீற் றுயிர்மெய்
கரந்திட வொற்றனவ் வாகு மென்ப.

௧௯௯. ஒன்ப தொழித்தவெண் ணொன்பது மிர ட்டின்
முன்னதின் முன்னல வோட வுயிர்வரின்
வவ்வு மெய்வரின் வந்தது மிகனெறி.

ஊகாரவீற்றுச் சிறப்புவிதி.

௨00. பூப்பெயர் முன்னின மென்மையுந் தோ ன்றும்.

ஏகார ஓகார வீற்றுச் சிறப்புவிதி.

௨0௧. இடைச்சொல்லேயோ முன்வரி னியல்பே.

ஐகார வீற்றுச் சிறப்புவிதி.

௨0௨. வேற்றுமை யாயி னைகா னிறுமொழி
ஈற்றழி வோடுமம் மேற்பவு முளவே.

௨0௩. பனைமுன் கொடிவரின் மிகலும் வலிவரின்
ஐபோ யம்முந் திரள்வரி னுறழ்வும்
அட்டுறி னைகெட்டந் நீள்வுமாம் வேற்றுமை.

உயிரீற்றுப்புணரியன் முற்றிற்று.

ச. மெய்யீற்றுப்புணரியல்.

மெய்யீற்றின்முன் உயிர்.

உ0ச. உடன்மே லுயிர்வந் தொன்றுவ தியல்பே.

உ0ரு. தனிக்குறின் முன்னொற் றுயிர்வரி னிரட்டும்.

மெய்யீற்றின்முன் மெய்.

உ0சு. தன்னொழி மெய்ம்முன் யவ்வரி னிகரம்
துன்னு மென்று துணிநரு முளரே.

உ0எ. ஞணநம லவளன வொற்றிறு தொழிற்பெயர்
ஏவல் வினைநனி யவ்வன் மெய்வரின்
உவ்வுறு மேவ லுறுசில சில்வழி.

உ0அ. நவ்விறு தொழிற்பெயர்க் கவ்வுமாம் வேற்றுமை.

ணகர னகர வீறு.

உ0கூ. ணனவல் லினம்வரட் டறவும் பிறவரின்
இயல்பு மாகும் வேற்றுமைக் கல்வழிக்
கனைத்துமெய் வரினு மியல்பா கும்மே.

உகo. குறிலணை வில்லா ணனக்கள் வந்த
நகரந் திரிந்துழி நண்ணுங் கேடே.

உகக. சாதி குழூஉப்பரண் கவண்பெய ரிறுதி
இயல்பாம் வேற்றுமைக் குணவெண் சாண்பிற
டவ்வா கலுமா மல்வழி யும்மே.

உகஉ. னஃகான் கிளைப்பெய ரியல்பு மஃகான்
அடைவு மாகும் வேற்றுமைப் பொருட்கே.

உகங. மீன்றவ் வொடுபொரூஉம் வேற்றுமை
வழியே.

உகச. தேன்மொழி மெய்வரி னியல்பு மென்மை
மேவி னிறுதி யழிவும் வலிவரின்
ஈறுபோய் வலிமெலி மிகலுமா மிருவழி.

உகரு. மரமல் லெகின்மொழி யியல்பு மகரம்
மருவ வலிமெலி மிகலு மாகும்.

உகசு. குயினூன் வேற்றுமைக் கண்ணுமியல்பே.

உகஎ. மின்பின் பன்கன் றொழிற்பெய ரனைய
கன்னவ் வேற்று மென்மையோ டுறழும்.

உகஅ. தன்னென் னென்பவற் றீற்றுனவ் வன்
மையோ
டுறழு நின்னீ றியல்பா முறவே.

ம க ர வீ று.

உகக௯. மவ்வீ றொற்றழிந் துயிரீ றொப்பவும்
வன்மைக் கினமாத் திரிபவு மாகும்.

உ௨0. வேற்றுமை மப்போய் வலிமெலி யுறழ்வும்
அல்வழி யுயிரிடை வரினியல் பும்முள.

உ௨க. நுந்தம்,
எம்நம் மீறு மவ்வரு ஞநவே.

உ௨௨. அகமுனர்ச் செவிகை வரினிடை யன
கெடும்.

உ௨௩. ஈமுங்,
கம்மு முருமுந் தொழிற்பெயர் மானும்
முதலன வேற்றுமைக் கவ்வும் பெறுமே.

யரழவீறு.

உ௨ச. யரழ முன்னர்க் கசதப வல்வழி
இயல்பு மிகலு மாகும் வேற்றுமை
மிகலு மினத்தோ டுறழ்தலும் விதிமேல்.

உ௨௫. தமிழவ் வுறவும் பெறும்வேற் றுமைக்கே
தாழுங் கோல்வந் துறுமே லற்றே.

உ௨௬. கீழின்முன் வன்மை விகற்பமு மாகும்.

லகர ளகரவீறு.

உ௪எ. லளவேற் றுமையிற் றடவு மல்வழி
அவற்றோ டுறழ்வும் வலிவரி னாமெலி
மேவி னணவு மிடைவரி னியல்பும்
ஆகு மிருவழி யானு மென்ப.

உ௪அ. குறில்வழி லளத்தவ் வணையி னாய்தம்
ஆகவும் பெறூஉ மல்வழி யானே.

உ௪௯. குறில்செறி யாலள வல்வழி வந்த
தகரந் திரிந்தபிற் கேடுமீ ரிடத்தும்
வருநத் திரிந்தபின் மாய்வும் வலிவரின்
இயல்புந் திரிபு மாவன வுளபிற.

உ௫0. லளவிறு தொழிற்பெய ரீரிடத்துமுவ்வுறு
வலிவரி னல்வழி யியல்புமா வனவுள.

உ௫௧. வல்லே தொழிற்பெய ரற்றிரு வழியும்
பலகைநாய் வரினும் வேற்றுமைக் கவ்வுமாம்.

உ௫௨. நெல்லுஞ்செல்லுங்கொல்லுஞ்சொல்லும்
அல்வழி யானும் றகர மாகும்.

உ௫௩. இல்லெ னின்மைச் சொற்கை யடைய
வன்மை விகற்பமு மாகா ரத்தொடு
வன்மை யாகலு மியல்பு மாகும்.

உ௩ச. புள்ளும் வள்ளுந் தொழிற்பெயருமானும்.

வ க ர வீ று.

உ௩ரு. சுட்டு வகரமு வினமுற முறையே
ஆய்தமு மென்மையு மியல்பு மாகும்.

உ௩சா. தெவ்வென் மொழியே தொழிற்பெய ரற்
மவ்வரின் வஃகான் மவ்வு மாகும். [றே

வருமொழித்தகர நகரத் திரிபு.

உ௩எ. னலமுன் றனவும் ணளமுன் டணவும்
ஆகுந் தநக்க ளாயுங் காலே.

[வேற்றுமைப்பொருட்புணர்ச்சியை
உருபுபுணர்ச்சியோடுமாட்டேறிதல்.]

உ௩அ. உருபின் முடிபவை யொக்குமப் பொரு
ளினும்.

புணரியல்களுக்குப் புறனடை.

உ௩கூ. இடையுரி வடசொலி னியம்பிய கொளா
தவும்

போலியு மரூஉவும் பொருந்திய வாற்றிற்
கியையப் புணர்த்தல் யாவர்க்கு நெறியே.

மெய்யீற்றுப்புணரியன் முற்றிற்று.

ரு. உருபுபுணரியல்.

உருபுகள்.

[எட்டுருபுகளுஞ் சாருமிடவகையால் இத்துணையாமென்பது.]

உசாo. ஒருவ னொருத்தி பலரொன்று பலவென
வருபெய ரைந்தொடு பெயர்முத லிருநான்
குருபு முறழ்தர நாற்பதா முருபே.

[வேற்றுமையுருபுகள் வருதற்குக் காரணமும் வருமிடமும்.]

உசக. பெயர்வழித் தம்பொரு டரவரு முருபே.

[ஐம்முதலிய ஆறுருபும் நிலைமொழி வருமொழியோடு புணருமாறு.]

உசஉ. ஒற்றுயிர் முதலீற் றுருபுகள் புணர்ச்
சியின்
ஒக்குமன் னப்பெயர் வேற்றுமைப் புணர்ப்பே.

சாரியை.

[சாரியைவருமாறு.]

உசங. பதமுன் விகுதியும் பதமு முருபும்
புணர்வழி யொன்றும் பலவுஞ் சாரியை
வருதலுந் தவிர்தலும் விகற்பமு மாகும்.

[சாரியைகள் இவையென்பது.]

உசச. அன் ஆன் இன் அல் அற்றிற் றத்தம்
தம்நம் நும்ஏ அஉ ஐகுன
இன்ன பிறவும் பொதுச்சா ரியையே.

உருபுபுணர்ச்சிக்குச் சிறப்புவிதி.

உசரு. எல்லா மென்ப திழிதிணை யாயின்
அற்றோ டுருபின் மேலும் முறுமே
அன்றே னம்மிடை யடைந்தற் றுகும்.

உசசு. எல்லாரு மெல்லீரு மென்பவற் றும்மை
தள்ளி நிரலே தம்நும் சாரப்
புல்லு முருபின் பின்ன ரும்மே.

உசஎ. தான்தாம் நாம்முதல் குறுகும் யான்யாம்
நீநீர் என்எம் நின் நு மாம்பிற
குவ்வி னவ்வரு நான்கா றிரட்டல.

உசஅ. ஆமா கோனவ் வணையவும் பெறுமே.

உசகூ. ஒன்று முதலெட் டீறு மெண்ணூர்
பத்தின்முன் னான்வரிற் பவ்வொற் றொழியமேல்
எல்லா மோடு மொன்பது மிற்றே.

உரு௦. வவ்விறு சுட்டிற் கற்றுறல் வழியே.

உருக. சுட்டின்முன் னாய்த மன்வரிற் கெடுமே.

உருஉ. அத்தி னகர மகரமுனை யில்லை.

புறனடை.

[சாரியைக்குப் புறனடை.]

உருௌ. இதற்கிது சாரியை யெனினளவின்மை
விகுதியும் பதமு முருபும் பகுத்திடை [யின்
நின்ற வெழுத்தும் பதமு மியற்கையும்
ஒன்ற வுணர்த்த லுரவோர் நெறியே.

[நான்குபுணர்ச்சிக்கும் புறனடை.]

உருச. விகுதி பதஞ்சா ரியையுரு பனைத்தினும்
உரைத்த விதியினேர்ந் தொப்பன கொளலே.

[வேற்றுமைப்புணர்ச்சிக்குப் புறனடை.]

உருரு. இயல்பின் விகாரமும் விகாரத் தியல்பும்
உயர்திணை யிடத்து விரிந்துந் தொக்கும்
விரவுப் பெயரின் விரிந்து நின்றும்
அன்ன பிறவு மாகுமை யுருபே.

உ௬௯. புள்ளியு முயிரு மாயிறு சொன்முன்
தம்மி னாகிய தொழின்மொழி வரினே
வல்லினம் விகற்பமு மியல்பு மாகும்.

[எழுத்ததிகாரத்துக்குப் புறனடை.]

உ௭௦. இதற்கிது முடிபென் றெஞ்சா தியாவும்
விதிப்பள வின்மையின் விதித்தவற் றியலான்
வகுத்துரை யாதவும் வகுத்தனர் கொளலே.

உருபுபுணரியன் முற்றிற்று.

எழுத்ததிகார முற்றுப்பெற்றது.

இரண்டாவது

சொல்லதிகாரம்.

க. பெயரியல்.

[கடவுள்வணக்கமும் அதிகாரமும்.]

உருஅ. முச்சக நிழற்று முழுமதி முக்குடை
அச்சுத னடிதொழு தறைகுவன் சொல்லே.

சொல்லின் பொதுவிலக்கணம்.

[சொல் இன்னதென்பது.]

உருகூ. ஒருமொழி தொடர்மொழி பொதுமொழி யென்று
இருதிணை யைம்பாற் பொருளையுந் தன்னையும்
மூவகை யிடத்தும் வழக்கொடு செய்யுளின்
வெளிப்படை குறிப்பின் விரிப்பது சொல்லே.

[மூவகைமொழி.]

உகூ0. ஒருமொழியொருபொருளனவாந்தொடர் மொழி
பலபொரு ளனபொது விருமையு மேற்பன.

[இருதிணை.]

௨௬௧. மக்க டேவர் நரக ருயர்திணை
மற்றுயி ருள்ளவு மில்லவு மஃறிணை.

[ஐம்பால்.]

௨௬௨. ஆண்பெண்பலரெனமுப்பாற் றுயர்திணை.

௨௬௩. ஒன்றே பலவென் றிருபாற் றஃறிணை.

[திணைபால்களுக்குப் புறனடை.]

௨௬௪. பெண்மைவிட் டாணவா வுவபே டாண்
ஆண்மைவிட் டல்ல தவாவுவ பெண்பால் [பால்
இருமையு மஃறிணை யன்னவு மாகும்.

[மூன்றிடத்துஞ் சொற்றன்னையும்
பொருளையும் உணர்த்துதல்.]

௨௬௫. படர்க்கை வினைமுற்று நாமங் குறிப்பிற்
பெறப்படுந் திணைபா லனைத்து மேனை
இடத்தவற் றொருமைப் பன்மைப் பாலே.

[மூ வி ட ம்.]

௨௬௬. தன்மைமுன்னிலை படர்க்கைமூ விடனே.

[வழக்கு இன்னதென்பது.]

உசுஎ. இலக்கண முடைய திலக்கணப் போலி
மரூஉவென் றாகு மூவகை யியல்பும்
இடக்க ரடக்கன் மங்கலங் குழூஉக்குறி
எனுமுத் தகுதியோ டாறும் வழக்கியல்.

[செய்யுள் இன்னதென்பது.]

உசுஅ. பல்வகைத் தாதுவி னுயிர்க்குடல் போற்
சொல்லாற் பொருட்கிட னாக வுணர்வினின் [பல
வல்லோ ரணிபெறச் செய்வன செய்யுள்.

வெளிப்படை குறிப்பு.

உசுசு. ஒன்றொழி பொதுச்சொல் விகாரந் தகுதி
ஆகு பெயரன் மொழிவினைக் குறிப்பே
முதறொகை குறிப்போ டின்ன பிறவும்
குறிப்பிற் றருமொழி யல்லன வெளிப்படை.

சொற்பாகுபாடு.

[சொல் இத்தனைவகைப்படுமென்பது.]

உஎ0. அதுவே,
இயற்சொற் றிரிசொ லியல்பிற் பெயர்வினை
எனவிரண் டாகு மிடையுரி யடுத்து
நான்கு மாந்திசை வடசொலணு காவழி.

[இயற்சொல்.]

உஎக. செந்தமி ழாகித் திரியா தியார்க்கும்
தம்பொருள் விளக்குந் தன்மைய வியற்சொல்.

[திரிசொல்.]

உஎஉ. ஒருபொருள் குறித்த பலசொல் லாகியும்
பலபொருள் குறித்த வொருசொல் லாகியும்
அரிதுணர் பொருளன திரிசொல் லாகும்.

[திசைச்சொல்.]

உஎ௩. செந்தமிழ் நிலஞ்சேர் பன்னிரு நிலத்தினும்
ஒன்பதிற் றிரண்டினிற் றமிழொழி நிலத்தினும்
தங்குறிப் பினவே திசைச்சொ லென்ப.

[வடசொல்.]

உஎச. பொதுவெழுத் தானுஞ் சிறப்பெழுத் தானும்
ஈரெழுத் தானு மியைவன வடசொல்.

பெயர்ச்சொல்.

[பெயரின் பொதுவிலக்கணம்.]

உஎரு. இடுகுறி காரண மரபோ டாக்கந்
தொடர்ந்து தொழிலல காலந் தோற்று
வேற்றுமைக் கிடனாய்த் திணைபா லிடத்தொன்
றேற்பவும் பொதுவு மாவன பெயரே.

[உயர்திணையாண்பாற்பெயர்.]

உஎசு. அவற்றுள்,
கிளையெண் குழூஉமுதற் பல்பொரு டிணைதேம்
ஊர்வா னகம்புற முதல நிலன்யாண்
டிருது மதிநா ளாதிக் காலந்
தோள்குழன் மார்புகண் காது முதலுறுப்
பளவறி வொப்பு வடிவு நிறங்கதி
சாதி குடிசிறப் பாதிப் பல்குணம்
ஓத லீத லாதிப் பல்வினை
இவையடை சுட்டு வினுப்பிற மற்ருே
டுற்ற னவ்வீறு நம்பி யாடூஉ
விடலை கோவேள் குரிசி ருேன்றல்
இன்னன வாண்பெய ராகு மென்ப.

[உயர்திணைப்பெண்பாற்பெயர்.]

உஎஎ. கிளைமுத லாகக் கிளந்த பொருள்களுள்
ளவ்வொற் றிகரக் கேற்ற வீற்றவும்
தோழி செவிலி மகடூஉ நங்கை
யையலோ டின்னன பெண்பாற் பெயரே.

[உயர்திணைப்பலர்பாற்பெயர்.]

உஎஅ. கிளந்த கிளைமுத லுற்றரவ் வீற்றவும்
கள்ளெ னீற்றி னேற்பவும் பிறவும்
பல்லோர் பெயரின் பகுதி யாகும்.

[அஃறிணையொன்றன்பாற்பெயர்.]

௩௭௯. வினாச்சுட் டுடனும் வேறுமாம் பொருள்
ஆதி யுறுதுச் சுட்டணை யாய்தம்
ஒன்றனெண் ணின்னன வொன்றன் பெயரே.

[அஃறிணைப்பலவின்பாற்பெயர்.]

௨௮௦. முன்ன ரவ்வொடு வருவை யவ்வும்
சுட்டிறு வவ்வுங் கள்ளிறு மொழியும்
ஒன்ற லெண்ணு முள்ள வில்ல
பல்ல சில்ல வுளவில பலசில
இன்னவும் பலவின் பெயரா கும்மே.

[அஃறிணையிருபாற்பொதுப்பெயர்.]

௨௮௧. பால்பகா வஃறிணைப் பெயர்கள்பாற் பொதுமைய.

[இருதிணைப்பொதுப்பெயர்.]

௨௮௨. முதற்பெயர் நான்குஞ் சினைப்பெயர்நான் கும்
சினைமுதற் பெயரொரு நான்கு முறையிரண்டும்
தன்மை நான்கு முன்னிலை யைந்தும்
எல்லாந் தாந்தா னின்னன பொதுப்பெயர்.

[முதற்பெயர்முதலிய நான்கையும் வகுத்தல்.]

௨௮௩. ஆண்மைபெண்மையொருமை பன்மையி
ஆமந் நான்மைகளாண்பெண் முறைப்பெயர்.[ன்

[திணைப்பொதுப்பெயர் பாற்பொதுவாதல்.]

உஅச. அவற்றுள்,
ஒன்றே யிருதிணைத் தன்பா லேற்கும்.

[தன்மை முன்னிலை படர்க்கைப் பெயர்கள்.]

உஅரு. தன்மை யானுன் யாநா முன்னிலை
எல்லீர் நீயிர் நீவிர் நீர்நீ
அல்லன படர்க்கை யெல்லா மெனல்பொது.

[தொழிற்பெயர்க்கும் வினையாலணையும்
பெயர்க்கும் இடம் வகுத்தல்.]

உஅசு. வினையின் பெயரே படர்க்கை வினையால்
அணையும் பெயரே யாண்டு மாகும்.

[பன்னிரண்டு பொதுப்பெயர்.]

உஅஎ. தான்யா னுனீ யொருமை பன்மைதாம்
யாநா மெலாமெலீர் நீயிர்நீர் நீவிர்.

[எண்ணுல்வரும் உயர்திணைப் பெயர்க்குப்
புறனடை.]

உஅஅ. ஒருவ னொருத்திப் பெயர்மே லெண்ணில.

உஅகூ. ஒருவ ரென்ப துயரிரு பாற்றாய்ப்
பன்மை வினைகொளும் பாங்கிற் றென்ப.

[ஆகுபெயர்.]

உகூ0. பொருண்முத லாறோ டளவை சொற்றானி

கருவி காரியங் கருத்த ஞதியுள்
ஒன்றன் பெயரா னதற்கியை பிறிதைத்
தொன்முறை யுரைப்பன வாகு பெயரே.

வேற்றுமை.

[வேற்றுமை இனைய என்பதும் இத்துணைய என்பதும்.]

உஉக. ஏற்கு மெவ்வகைப்பெயர்க்குமீருய்ப்பொ
வேற்றுமைசெய்வனவெட்டேவேற்றுமை. [ருள்

[வேற்றுமையின் பெயரு முறையும்.]

உஉஉ. பெயரே ஐஆல் குஇன் அதுகண்
விளியென் றுகு மவற்றின் பெயர்முறை.

[எழுவாயுருபு மற்றையுருபுகளையேற்றல்.]

உஉ௩. ஆற னுருபு மேற்குமவ் வுருபே.

[ஐமுதலிய உருபேலாப்பெயர்கள்.]

உஉச. நீயிர் நீவிர்நா னெழுவா யலபெரு.

[பெயர்வேற்றுமை.]

உஉரு. அவற்றுள்,
எழுவா யுருபு திரிபில் பெயரே
வினைபெயர் வினக்கொள லதன்பய னிலையே.

[இரண்டாம் வேற்றுமை.]

உகூகூ. இரண்டா வதனுருபையே யதன்பொருள்
ஆக்க லழித்த லடைத னீத்தல்
ஒத்த லுடைமை யாதி யாகும்.

[மூன்றாம் வேற்றுமை.]

உகூஎ. மூன்று வதனுரு பாலா னோடொடு
கருவி கருத்தா வுடனிகழ் வதன்பொருள்.

[நான்காம்வேற்றுமை.]

உகூஅ. நான்கா வதற்குரு பாகுங் குவ்வே
கொடைபகை நேர்ச்சி தகவது வாதல்
பொருட்டு முறையாதி யினிதற்கிதெனல் பொருளே.

[ஐந்தாம்வேற்றுமை.]

உகூகூ. ஐந்தா வதனுரு பில்லு மின்னும்
நீங்கலொப் பெல்லை யேதுப் பொருளே.

[ஆறாம்வேற்றுமை.]

௩00. ஆற னொருமைக் கதுவு மாதுவும்
பன்மைக் கவ்வு முருபாம் பண்புறுப்
பொன்றன் கூட்டம் பலவி னீட்டந்
திரிபி னாக்க மாந்தற் கிழமையும்
பிறிதின் கிழமையும் பேணுதல் பொருளே.

[ஏழாம் வேற்றுமை.]

௩௦௧. ஏழ னுருபுகண் ணாதி யாகும்
பொருண்முத லாறு மோரிரு கிழமையின்
இடனாய் நிற்ற லிதன்பொரு ளென்ப.

[கண்முதலிய உருபுகள்.]

௩௦௨. கண்கால் கடையிடை தலைவாய் திசைவயின்
முன்சார் வலமிட மேல்கீழ் புடைமுதல்
பின்பா டளைதே முழைவழி யுழியுளி
உள்ளகம் புறமில் லிடப்பொரு ளுருபே.

[எட்டாம் வேற்றுமை.]

௩௦௩. எட்ட னுருபே யெய்துபெய ரீற்றின்
திரிபு குன்றன் மிகுத லியல்பயற்
றிரிபு மாம்பொருள் படர்க்கை யோரைத்
தன்முக மாகத் தானழைப் பதுவே.

[விளிக்கப்படுபெயர்கள்.]

௩௦௪. இஉ ஊவோ டையோ னளரல
யவ்வீற் றுயர்திணை யோரவல் லவற்றொடு
ணஃகா னவீ றாகும் பொதுப்பெயர்
ஞநவொழி யனைத்தீற் றஃறிணை விளிப்பன.

[பொதுவாகிய விளியுருபு.]

௩௦௫. இம்முப் பெயர்க்கண் ணியல்பு மேயும்
இகர நீட்சியு முருபா மன்னே.

[விளியுருபுக்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி.]

௩௦௬. ஐயிறு பொதுப்பெயர்க் காயு மாவும்
உருபா மல்லவற் றுயுமாகும்.

௩௦௭. ஒருசார்னவ்வீற் றுயர்திணைப்பெயர்க்கண்
அளபீ றழிவய னீட்சி யதனே
டுறு போத லவற்றே டோவுறல்
ஈறழிந் தோவுற லிறுதியவ் வாதல்
அதனே டயறிரிந் தேயுற லீறழிந்
தயலே யாதலும் விளியுரு பாகும்.

௩௦௮. ளஃகா னுயர்பெயர்க் களபீ றழிவயல்
நீட்சி யிறுதி யவ்வொற் றுதல்
அயலி லகரமே யாதலும் விளித்தனு.

௩௦௯. ரவ்வீற் றுயர்பெயர்க் களபெழ வீற்றயல்
அகரம் இஈ யாத லாண்டையா
ஈயாத லதனே டேயுற லீற்றே
மிக்கயல் யாக்கெட் டதனய னீடல்
ஈற்றி னீருற லிவையுமீண் டுருபே.

௩௧௦. லகாரவீற் றுயர்பெயர்க் களபய னீட்சியும்
யகார வீற்றிற் களபுமா முருபே.

௩௧௧. னவ்வீற் றுயர்திணை யல்விரு பெயர்க்கண்
இறுதி யழிவத னேடய னீட்சி.

௩௧௨. ளஃவீற் றஃறிணைப் பெயர்பொதுப் பெய
ஈற்றய னீட்சியு முருபா கும்மே. [ர்க்கண்

[விளியுருபுகளுக்குப் புறனடை.]

௩௧௩. அண்மையி னியல்புமீ றழிவுஞ் சேய்மை
அளபும் புலம்பி னேவு மாகும். [யின்

[விளியுருபேலாப் பெயர்கள்.]

௩௧௪. நுவ்வொடு வினுச்சுட் டுற்ற னளர
வைதுத் தாந்தா னின்னன விளியா.

[முதல்சினைத் தொடர்பின்கண் அவ்விரண்டினும்
இரண்டனுருபு வாராதெனல்.]

௩௧௫. முதலை யையுறிற் சினையைக் கண்ணுறும்
அதுமுதற் காயிற் சினைக்கை யாகும்.

[ஐயுருபு முதல் சினை யிரண்டினும் வாராமைக்குக்
காரணமும் மேலைச் சூத்திரப்பொருளோடு
இப்பொருளைப் பிண்டப்பொருளுக்கும்
ஏற்பித்தலும்.]

௩௧௬. முதலிவை சினையிவை யெனவே றுளவில
உரைப்போர் குறிப்பின வற்றே பிண்டமும்.

[உருபுமயக்கம்.]

௩௧௭. யாத னுருபிற் கூறிற் றாயினும்
பொருள்சென் மருங்கின் வேற்றுமை சாரும்.

[சிலவேற்றுமையுருபு செய்யுளிடத்துத் திரிந்துவருதல்.]

௩௧௮. ஐயான் குச்செய்யுட் கவ்வு மாகும்
ஆகா வஃறிணைக் கானல் லாதன.

[எட்டுவேற்றுமைக்கும் முடிக்குஞ்சொல்.]

௩௧௯. எல்லை யின்னு மதுவும் பெயர்கொளும்
அல்ல வினைகொளு நான்கே ழிருமையும்
புல்லும் பெரும்பாலு மென்மனர் புலவர்.

பெயரியல் முற்றிற்று.

௨. வினையியல்.

வினைச்சொல்.

[தெரிநிலைவினைச் சொல்லின்பொதுவிலக்கணம்.]

௩௨௦. செய்பவன் கருவி நிலஞ்செயல் காலஞ்
செய்பொரு ளாறுந் தருவது வினையே.

[குறிப்புவினைச்சொல்லின் பொதுவிலக்கணம்.]

௩௨௧. பொருண்முத லாறினுந் தோற்றிமுன் னாறனுள்
வினைமுதன்மாத்திரை விளக்கல்வினைக்குறிப்பே.

[வினைச்சொற்களைவகுத்தல்.]

௩௨௨. அவைதாம்,
முற்றும் பெயர்வினை யெச்சமு மாகி
ஒன்றற் குரியவும் பொதுவு மாகும்.

முற்றுவினை.

[முற்று வினை யினையவென்பது.]

௩௨௩. பொதுவியல்பாறையுந்தோற்றிப்பொருட்பெயர்.
முதலறு பெயரல தேற்பில முற்றே.

[தெரிநிலை வினைமுற்று விகற்பம்.]

௩௨௪. ஒருவன்முத லைந்தையும் படர்க்கை யிடத்தும்
ஒருமைப் பன்மையைத் தன்மைமுன்னிலையினும்
முக்கா லத்தினு முரண முறையே
மூவைந் திருமூன் றுருய் முற்று
வினைப்பத மொன்றே மூவொன் பானும்.

[ஆண்பாற்படர்க்கை வினைமுற்று.]

௩௨௫. அன்ஆ னிறுமொழி யாண்பாற்படர்க்கை.

[பெண்பாற்படர்க்கை வினைமுற்று]

௩௨௬. அள்ஆ ளிறுமொழி பெண்பாற்படர்க்கை.

[பலர்பாற்படர்க்கை வினைமுற்று.

கஉஎ. அர்ஆர் பவ்வூ ரகரமா ரீற்ற
பல்லோர் படர்க்கைமார் வினையொடு முடிமே.

[ஒன்றன்பாற்படர்க்கை வினைமுற்று.]

கஉஅ. துறுடுக் குற்றிய லுகர வீற்ற
ஒன்றன் படர்க்கை டுக்குறிப்பி னாகும்.

[பலவின்பாற்படர்க்கை வினைமுற்று.]

கஉகூ. அஆ வீற்ற பலவின் படர்க்கை
ஆவே யெதிர்மறைக் கண்ண தாகும்.

[இருதிணைப்பொதுவினை.]

கநo. தன்மை முன்னிலை வியங்கோள் வேறில்லை
உண்டீ ரெச்ச மிருதிணைப் பொதுவினை.

[தன்மையொருமை வினைமுற்று.]

கநக. குடுதுறு வென்னுங் குன்றிய லுகரமோ
டல்லன் னென்னே னாகு மீற்ற
இருதிணை முக்கூற் றொருமைத் தன்மை.

[தன்மைப்பன்மைவினைமுற்று.]

கநஉ. அம்மா மென்பன முன்னிலை யாரையும்
எம்மே மோமிவை படர்க்கை யாரையும்
உம்மூர் கடதற விருபா லாரையும்
தன்னொடு படுக்குந் தன்மைப் பன்மை.

[வினையுடனு முடியுந் தன்மை வினைமுற்றுக்கள்.]

௩௩௩. செய்கெனொருமையுஞ் செய்குமென் பன்
மையும்
வினையொடு முடியினும் விளம்பிய முற்றே.

[உளப்பாட்டுப்பன்மைமுன்னிலை.]

௩௩௪. முன்னிலை கூடிய படர்க்கையு முன்னிலை

[முன்னிலையொருமை வினைமுற்று.]

௩௩௫. ஐயா யிகர வீற்ற மூன்றும்
ஏவலின் வருஉ மெல்லா வீற்றவும்
முப்பா லொருமை முன்னிலை மொழியே.

௩௩௬. முன்னிலை முன்ன ரீயு மேயும்
அந்நிலை மரபின் மெய்யூர்ந்து வருமே.

[முன்னிலைப் பன்மைவினைமுற்று.]

௩௩௭. இர் ஈர் ரீற்ற விரண்டு மிருதிணைப்
பன்மை முன்னிலை மின்னவற் றேவல்.

[வியங்கோள் வினைமுற்று.]

௩௩௮. கயவொடு ரவ்வொற் றீற்ற வியங்கோள்
இயலு மிடம்பா லெங்கு மென்ப.

[வேறு, இல்லை, உண்டு.]

௩௩௯. வேறில்லை யுண்டைம் பான்மூ விடத்தன.

பெயரெச்சம்.

[பெயரெச்சம் இனையவென்பது.]

௩௪௦. செய்த செய்கின்ற செய்யுமென் பாட்டிற்
காலமுஞ் செயலுந் தோன்றிப் பாலொடு
செய்வ தாதி யறுபொருட் பெயரும்
எஞ்ச நிற்பது பெயரெச் சம்மே.

[செய்யுமெனெச்சத்திற்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி.]

௩௪௧. செய்யுமெனெச்சவீற் றுயிர்மெய்சேறலுஞ்
செய்யுளு ளும்முந் தாகலு முற்றேல்
உயிரு முயிர்மெய்யு மேகலு முளவே.

வினையெச்சம்.

[வினையெச்சம் இனைய வென்பது.]

௩௪௨. தொழிலுங்காலமுந் தோன்றிப்பால்வினை
ஒழிய நிற்பது வினையெச் சம்மே.

[வினையெச்சவாய்பாடுகள்.]

௩௪௩. செய்து செய்பு செய்யாச் செய்யூச்
செய்தெனச் செயச்செயின் செய்யிய செய்யியர்
வான்பான் பாக்கின வினையெச் சம்பிற
ஐந்தொன் றாறுமுக் காலமு முறைதரும்.

[வினையெச்சங்களுக்கு முடிபுவேறுபாடு.]

௩௪௪. அவற்றுள்,
முதலி னான்கு மீற்றின் மூன்றும்
வினைமுதல் கொள்ளும் பிறவுமேற் கும்பிற.

[வினைமுதல்கொள்ளுமென்றவற்றிற்கு ஒரு புறனடை.]

௩௪௫. சினைவினை சினையொடு முதலொடுஞ் செறியும்.

௩௪௬. சொற்றிரி யினும்பொரு டிரியா வினைக்குறை.

ஒழிபு.

[வினைக்குறிப்பு.]

௩௪௭. ஆக்க வினைக்குறிப் பாக்கமின் றியலா.

[செய்யுமென் முற்று]

௩௪௮. பல்லோர்படர்க்கைமுன்னிலைதன்மையிற்
செல்லா தாகுஞ் செய்யுமென் முற்றே.

[பாற்பொது வினை.]

௩௪௯. யாரென் வினாவினைக் குறிப்புயர் முப்பால்.

௩௫௦. எவனென் வினாவினைக்குறிப்பிழியிருபால்.

[இருவகைமுற்றிற்கும் ஒருபுறனடை.]

௩௫௧. வினைமுற் றேவினை யெச்ச மாகலுங்
குறிப்புமுற் றீரெச்ச மாகலு முளவே.

வினையியன் முற்றிற்று

௩. பொதுவியல்.

[இது முன்வந்த பெயர்க்கும் வினைக்கும் பின் வரும்
இடைக்கும் உரிக்கும் பொதுவிலக்கணங்களைச்
சிங்கநோக்காக அறிவித்தற் பொருட்டு
நடுவே வைக்கப்பட்டது.]

[பாற்பொதுமை நீங்குநெறி.]

௩௫௨. இருதிணை யாண்பெ ணுள்ளொன் றனை யொ
பெயரும் வினையுங் குறிப்பி னானே. [ழிக்கும்

[பெயர்வினையிடத்து ளஈறயல் திரிதல்.]

௩௫௩. பெயர்வினை யிடத்து னளரய வீற்றயல்
ஆவோ வாகலுஞ் செய்யுளு ளுரித்தே.

[உருபும் வினையீறும் எதிர்மறையினுந் திரியாமை.]

௩௫௪. உருபும் வினையுமெதிர்மறுத் துரைப்பினுந்
திரியா தத்தமீற் றுருபி னென்ப.

[உருபும் வினையும் அடுக்கி முடிதல்]

௩௫௫. உருபுபல வடுக்கினும்வினைவேறடுக்கினும்
ஒருதம் மெச்ச மீறுற முடியும்.

[இடைப் பிற வரல்.]

௩௫௬. உருபு முற்றீ ரெச்சங் கொள்ளும்
பெயர்வினை யிடைப்பிற வரலுமா மேற்பன.

[முடிக்குஞ் சொன்னிற்குமிடம்.]

௩௫௭. எச்சப் பெயர்வினை யெய்து மீற்றினும்.

[ஒருமொழிவேறென்றையமைத்தல்.]

௩௫௮. ஒருமொழி யொழிதன் னினங்கொளற்
குரித்தே.

[திணைபாலிடப்பொதுமைநீங்குநெறி.]

௩௫௯. பொதுப்பெயர் வினைகளின் பொதுமை
நீக்கும்
மேல்வருஞ் சிறப்புப் பெயர்வினை தாமே.

[எச்சங்களின்முடிபு]

௩௬௦. பெயர்வினை யும்மைசொற்பிரிப்பெனவொ
ழியிசை
எதிர்மறை யிசையெனுஞ் சொல்லொழி பொன்ப
குறிப்புந் தத்த மெச்சங் கொள்ளும். [தங்

தொகைநிலைத்தொடர்மொழி.

[தொகைநிலைத் தொடர்மொழி இனையவென்பது.]

ருசுக. பெயரொடுபெயரும் வினையும் வேற்றுமை
முதலிய பொருளி னவற்றி னுருபிடை
ஒழிய விரண்டு முதலாத் தொடர்ந்தொரு
மொழிபோ னடப்பன தொகைநிலைத் தொடர்ச்
சொல்.

[தொகைநிலைத்தொடர்ப் பாகுபாடு.]

ருசுஉ. வேற்றுமை வினைபண் புவமை யும்மை
அன்மொழி யெனவத் தொகையா றாகும்.

[வேற்றுமைத்தொகை.]

ருசுரு. இரண்டு முதலா மிடையா றுருபும்
வெளிப்பட லில்லது வேற்றுமைத் தொகையே.

[வினைத்தொகை.]

ருசுச. காலங்கரந்தபெயரெச்சம்வினைத்தொகை.

[பண்புத்தொகை.]

ருசுரு. பண்பை விளக்கு மொழிதொக் கனவும்
ஒருபொருட் கிருபெயர்வந்தவுங் குணத்தொகை.

[உவமத் தொகை.

ருசுசு. உவம வுருபில துவமத் தொகையே.

[உவமவுருபுகள்.]

௩௬௭. போலப் புரைய வொப்ப வுறழ
மானக் கடுப்ப வியைய வேய்ப்ப
நேர நிகர வன்ன வின்ன
என்பவும் பிறவு முவமத் துருபே.

[உம்மைத்தொகை.]

௩௬௮. எண்ண லெடுத்தன் முகத்த னீட்டல்
எனுநான் களவையு ளும்மில தத்தொகை.

[அன்மொழித்தொகை.]

௩௬௯. ஐந்தொகை மொழிமேற் பிறதொக லன்
மொழி.

[தொகைநிலைத் தொடர்மொழிகளிற்
பொருள்சிறக்கும் இடங்கள்.]

௩௭௦. முன்மொழி பின்மொழி பன்மொழி புற
மொழி
எனுநான்கிடத்துஞ் சிறக்குந் தொகைப்பொருள்.

[இடத்தொகை பெயர்த்தொகைகட்கு
வேறுபாடறிதுறி.]

௩௭௧. வல்லொற்று வரினே யிடத்தொகை யா
கும்
மெல்லொற்று வரினே பெயர்த்தொகை யாகும்.

[உம்மைத்தொகைக்குப் புறனடை.]

௩எ௨. உயர்திணை யும்மைத் தொகைபல ரீறே.

[தொகாநிலைத் தொடர்மொழிகள்
பலபொருள் படுதல்.]

௩எ௩. தொக்குழி மயங்குந விரண்டு முதலேழ்
எல்லைப் பொருளின் மயங்கு மென்ப.

தொகாநிலைத்தொடர்மொழி.

௩எ௪. முற்றீ ரெச்ச மெழுவாய் விளிப்பொருள்
ஆறுரு பிடையுரி யடுக்கிவை தொகாநிலை.

வழாநிலை வழுவமைதி.

[வழு விகற்பங்கள்.]

௩எ௫. திணையே பாலிடம் பொழுது வினாவிறை
மரபா மேழு மயங்கினும் வழுவே.

[திணையோடு வினாவிடையும் பாலோடு
வினாவிடையும் வழுவாமற் காத்தல்.]

௩எ௬. ஐயந் திணைபா லவ்வப் பொதுவினும்
மெய்தெரி பொருண்மே லன்மையும் விளம்புப.

[திணைவழுவமைதி.]

௩எ௭. உயர்திணை தொடர்ந்த பொருண்முத லாறும்
அதனொடு சார்த்தி னத்திணை முடிபின. [றும்

[திணைபான்மரபு வழுவமைதி.]

௩எஅ. திணைபால் பொருள்பல விரவின சிறப்பி
மிகவினு மிழிபினு மொருமுடி பினவே. [னும்

[திணைபால் வழுவமைதி.]

௩எகூ. உவப்பினு முயர்வினுஞ் சிறப்பினுஞ் செ
றலினும்
இழிப்பினும் பாறிணை யிழுக்கினு மியல்பே.

[பாலிட வழுவமைதி.]

௩அ0. ஒருமையிற் பன்மையும் பன்மையி னொரு
ஓரிடம் பிறவிடந் தழுவலு முளவே. [மையும்

[இடம் வழுவாமற் காத்தல்]

௩அக. தரல்வரல் கொடைசெலல் சாரும் படர்
எழுவா யிரண்டு மெஞ்சிய வேற்கும். [க்கை

[காலம்.]

௩அஉ. இறப்பெதிர்வு நிகழ்வெனக்காலமூன்றே.

[காலவழுவமைதி.]

௩அ௩. முக் காலத்தினு மொத்தியல் பொருளைச்
செப்புவர் நிகழுங் காலத் தானே.

எ

௩அச. விரைவினு மிகவினுந் தெளிவினு மியல்
பினும்
பிறழவும் பெறூஉமுக் காலமு மேற்புழி.

[அறுவகை வினா.]

௩அரு. அறிவறியாமையையுறல்கொளல்கொடை
ஏவ றரும்வினா வாறு மிழுக்கார்.

[எண்வகை விடை.]

௩அகூ. சுட்டு மறைநே ரேவல் வினாதல்
உற்ற துரைத்த லுறுவது கூறல்
இனமொழி யெனுமெண் ணிறையு ளிறுதி
நிலவிய வைந்துமப் பொருண்மையி னேர்ப.

[வினாவிடைகளின் முதல் சினை வழுவாமை.]

௩அஎ. வினாவினுஞ்செப்பினும்விரவாசினைமுதல்.

[மரபு.]

௩அஅ. எப்பொரு ளெச்சொலி னெவ்வா றுயர்ந்
செப்பின ரப்படிச் செப்புதன் மரபே. [தோர்

[மரபுவழா நிலை.]

௩அ௯. வேறுவினைப் பல்பொருடழுவிய பொதுச்
சொலும்
வேறவற்றெண்ணுமோர் பொதுவினை வேண்டும்.

௩௯0. வினைசார் பினமிட மேவி விளங்காப்
பலபொருளொருசொற்பணிப்பர்சிறப்பெடுத்தே.

௩௯௧. எழுத்தியறிரியாப்பொருடிரிபுணர்மொழி
இசைத்திரி பாற்றெளி வெய்து மென்ப.

[மரபு வழாநிலையும் வழுவமைதியும்.]

௩௯௨. ஒருபொருண் மேற்பல பெயர்வரினிறுதி
ஒருவினை கொடுப்ப தனியு மொரோவழி.

௩௯௩. திணைநிலஞ் சாதி குடியே யுடைமை
குணந்தொழில் கல்வி சிறப்பாம் பெயரோ
டியற்பெய ரேற்றிடிற் பின்வரல் சிறப்பே.

௩௯௪. படர்க்கைமுப் பெயரோ டணையிற்சுட்டுப்

பெயர்பின் வரும்வினை யெனிற் பெயர்க்கெங்கும்
மருவும் வழக்கிடைச் செய்யுட் கேற்புழி.

௩௯௫. அசைநிலை பொருணிலை யிசைநிறைக்கொ
ருசொல்
இரண்டு மூன்றுநான் கெல்லைமுறை யடுக்கும்.

[மரபு வழாநிலை.]

௩௯௬. இரட்டைக்கிளவியிரட்டிற்பிரிந்திசையா.

௩௯௭. ஒருபொருட்பல்பெயர் பிரிவிலவரையார்.

[மரபு வழுவமைதி.]

௩௯௮. ஒருபொருட் பன்மொழி சிறப்பினின்
வழா.

[மரபு வழுவாமற் காத்தல்.]

௩௯௯. இனைத்தென் றறிபொரு ளுலகினிலாப்
பொருள்
வினைப்படுத் துரைப்பி னும்மை வேண்டும்.

[மரபு வழுவமைதி.]

௪௦௦. செயப்படு பொருளைச் செய்தது போலத்
தொழிற்படக் கிளத்தலும் வழக்கினு ளுரித்தே.

[மரபுவழுவாமற்காத்தலும் மரபுவழுவமைதியும்.]

௪௦௧. பொருண்முதலாறுமடைசேர்மொழியினம்
உள்ளவு மில்லவு மாமிரு வழக்கினும்.

[மரபு வழுவாமற் காத்தல்.]

௪௦௨. அடைமொழி யினமல் லதுந்தரு மாண்
டுறின்.

[மரபு வழுவாமற்காத்தலும்மரபுவழுவமைதியும்.]

௪௦௩. அடைசினைமுதன்முறையடைதலுமீரடை
முதலோ டாதலும் வழக்கிய லீரடை
சினையொடு செறிதலு மயங்கலுஞ் செய்யுட்கே.

[மரபு வழுவமைதி.]

௪௦௪. இயற்கைப் பொருளை யிற்றெனக் கிளத்தல்.

[மரபு வழுவாமற் காத்தலும் வழுவமைதியும்.]

௪௦௫. காரண முதலா வாக்கம் பெற்றும்
காரண மின்றி யாக்கம் பெற்றும்
ஆக்க மின்றிக் காரண மடுத்தும்
இருமையு மின்றியு மியலுஞ் செயும்பொருள்.

[மரபு வழுவாமற் காத்தல்.]

௪0௬. தம்பா லில்ல தில்லெனி னினனுய்
உள்ளது கூறி மாற்றியு முள்ளது
சுட்டியு முரைப்பர் சொற்சுருங் குதற்கே.

௪0௭. ஈதா கொடுவெனு மூன்று முறையே
இழிந்தோ னொப்போன் மிக்கோ னிரப்புரை.

[மரபு வழுவமைதி.]

௪0௮. முன்னத்தி னுணருங் கிளவியு முளவே.

௪0௯. கேட்குந போலவுங் கிளக்குந போலவும்
இயங்குந போலவு மியற்றுந போலவும்
அஃறிணை மருங்கினு மறையப் படுமே.

௪௧0. உருவக வுவமையிற் றிணைசினை முதல்கள்
பிறழ்தலும் பிறவும் பேணினர் கொளலே.

பொருள் கோள்.

[பொருள்கோளின் பெயருந் தொகையும்.]

௪௧௧. யாற்றுநீர்மொழிமாற்றுநிரனிறைவிற்பூண்
டாப்பிசை யளைமறி பாப்புக் கொண்டுகூட்
டடிமறி மாற்றெனப் பொருள்கோ ளெட்டே.

[யாற்றுநீர்ப் பொருள்கோள்.]

௪௪௨. மற்றையநோக்கா தடிதொறும்வான்பொரு
அற்றற் றொழுகுமஃ தியாற்றுப் புனலே. [ள்

[மொழிமாற்றுப் பொருள்கோள்.]

௪௪௩. ஏற்ற பொருளுக் கியையு மொழிகளை
மாற்றியோ ரடியுள் வழங்கன்மொழி மாற்றே.

[நிரனிறைப் பொருள்கோள்.]

௪௪௪. பெயரும் வினையுமாஞ் சொல்லையும் பொரு
ளையும்
வேறு நிரனிறீஇ முறையினு மெதிரினும்
நேரும் பொருள்கோ ணிரனிறை நெறியே.

[பூட்டுவிற் பொருள்கோள்.]

௪௪௫. எழுவா யிறுதி நிலைமொழி தம்முட்
பொருளேனைக் குடையது பூட்டுவில் லாகும்.

[தாப்பிசைப் பொருள்கோள்.]

௪௪௬. இடைநிலை மொழியே யேனையீ ரிடத்தும்
நடந்து பொருளை நண்ணுத ருப்பிசை.

[அளைமறிபாப்புப் பொருள்கோள்.]

௪௪௭. செய்யு ளிறுதி மொழியிடை முதலினும்
எய்திய பொருள்கோ ளளைமறி பாப்பே.

[கொண்டுகூட்டுப் பொருள்கோள்.]

சகஅ. யாப்படிபலவினுங்கோப்புடைமொழிகளை
ஏற்புழி யிசைப்பது கொண்டு கூட்டே.

[அடிமறிமாற்றுப் பொருள்கோள்.]

சகசு. ஏற்புழி யெடுத்துடன் கூட்டுறு மடியவும்
யாப்பீ றிடைமுத லாக்கினும் பொருளிசை
மாட்சியு மாறா வடியவு மடிமறி.

பொதுவியல் முற்றிற்று.

ச. இடையியல்.

[இடைச் சொல்லின் பொதுவிலக்கணம்.]

சஉ0. வேற்றுமை வினைசா ரியையொப் புருபுகள்
தத்தம் பொருள விசைநிறை யசைநிலை
குறிப்பெனெண் பகுதியிற் றனித்திய லின்றிப்
பெயரினும் வினையினும் பின்முன் னோரிடத்
தொன்றும் பலவும்வந் தொன்றுவ திடைச்சொல்.

[இடைச்சொற்பொருள்கள்.]

சஉக. தெரிநிலை தேற்ற மையமுற் றெண்சிறப்
பெதிர்மறை யெச்சம் வினாவிழை வொழியிசை
பிரிப்புக் கழிவாக்க மின்னன விடைப்பொருள்.

[ஏகார விடைச்சொல்.]

சஉஉ. பிரிநிலை வினாவெண் ணீற்றசை தேற்றம்
இசைநிறை யெனவா றேகா ரம்மே.

[ஓகார விடைச்சொல்.]

சஉங. ஒழியிசை வினாச்சிறப் பெதிர்மறை தெரி
கழிவசை நிலைபிரிப் பெனவெட் டோவே. [நிலை

[என, என்று இடைச்சொற்கள்.]

சஉச. வினைபெயர் குறிப்பிசை யெண்பண் பாறி
னெனவெனு மொழிவரு மென்று மற்றே. [னும்

[உம்மையிடைச்சொல்.]

சஉரு. எதிர்மறை சிறப்பையமெச்சமுற்றளவை
தெரிநிலை யாக்கமோ டும்மை யெட்டே.

[முற்றும்மைக்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி.]

சஉசு. முற்றும்மையொரோவழியெச்சமுமாகும்.

[எச்சவும்மைக் காவதோர் விதி.]

சஉஎ. செவ்வெண் ணீற்றதா மெச்ச வும்மை.

[சில எண்ணிடைச்சொற்களுக்காவதோ
ரிலக்கணம்.]

சஉஅ. பெயர்ச்செவ் வெண்ணே யென்று வெணு
வெண்
ணுன்குந் தொகைபெறு மும்மையென்றெனவோ
டிந்நான் கெண்ணுமஃ தின்றியு மியலும்.

[சில எண்ணிடைச்சொற்களுக்கு
எய்தியதன்மேற் சிறப்புவிதி.]

சஉகூ. என்று மெனவு மொடுவு மொரோவழி
நின்றும் பிரிந்தெண் பொருடொறு நேரும்.

[பெயரோடுவரும் இடைச்சொற்கள்
வினையோடும் வருமாறு.]

சஙo. வினையொடுவரினுமெண்ணினையவேற்பன.

[தில்லிடைச்சொல்.]

சஙக. விழைவே கால மொழியிசை தில்லே.

[மன்னிடைச்சொல்.]

சஙஉ. மன்னே யசைநிலை யொழியிசை யாக்கங்
கழிவு மிகுதி நிலைபே றாகும்.

[மற்றென்னுமிடைச்சொல்.]

சஙங. வினைமாற் றசைநிலை பிறிதெனு மற்றே.

[முன்னதற்கோர் புறனடை.]

சஙச. மற்றைய தென்பது சுட்டிய தற்கினம்.

[கொல்லிடைச்சொல்.]

சஙரு. கொல்லே யைய மசைநிலைக் கூற்றே.

[ஒடு, தெய்ய.]

சஙசு. ஒடுவுந் தெய்யவு மிசைநிறை மொழியே.

[அந்தில், ஆங்கு.]

சஙஎ. அந்திலாங்கசைநிலை யிடப்பொருளவ்வே.

[அம்மவிடைச்சொல்.]

சஙஅ. அம்ம வுரையசை கேண்மினென் றாகும்.

[வியங்கோளசை.]

சஙகூ. மாவென் கிளவி வியங்கோ ளசைச்சொல்.

[முன்னிலையசைச் சொல்.]

சசO. மியாயிக மோமதி யத்தை யித்தை
வாழிய மாளவீ யாழமுன் னிலையசை.

[எல்லாவிடத்தும் வரும் அசைச்சொல்.]

சசக. யாகா பிறபிறக் கரோபோ மாதிகுஞ்
சின்குரை யோரும் போலு மிருந்திட்
டன்றுந் தாந்தான் கின்றுநின் றசைமொழி.

இடையியன் முற்றிற்று.

ரு. உரியியல்.

[உரிச்சொல்லின் பொதுவிலக்கணம்.]

சசஉ. பல்வகைப் பண்பும் பகர்பெய ராகி
ஒருகுணம் பலகுணந் தழுவிப் பெயர்வினை
ஒருவா செய்யுட் குரியன வுரிச்சொல்.

[பண்பிது வென்பது.]

சசரு. உயிருயிரல்லதாம்பொருட்குணம்பண்பே.

[உயிர்ப்பொருள்.]

சசச. மெய்ந்நா மூக்கு நாட்டஞ் செவிகளின்
ஒன்றுமுத லாக்கீழ்க் கொண்டுமே லுணர்தலின்
ஓரறி வாதியா வுயிரைந் தாகும்.

[ஓரறிவுயிர்.]

சசரு. புன்மர முதலவுற் றறியுமோ ரறிவுயிர்.

[ஈரறிவுயிர்.]

சசசு. முரணந் தாதிநா வறிவொடீ ரறிவுயிர்.

[மூவறிவுயிர்.]

சசஎ. சிதலெறும் பாதிமூக்க றிவின் மூவறிவுயிர்.

[நாலறிவுயிர்.]

சசஅ. தும்பிவண் டாதிகண்ணறிவிஞ லறிவுயிர்.

[ஐயறிவுயிர்.]

சசகூ. வானவர் மக்க ணரகர் விலங்குபுள்
ஆதிசெவி யறிவோ டையறி வுயிரே.

[உயிரல்லாத பொருள்.]

சருo. உணர்விய லாமுயி ரொன்று மொழித்த
உடன்முத லனைத்து முயிரல் பொருளே.

[முன்னதற்கு ஒரு புறனடை.]

சருக. ஒற்றுமை நயத்தி னொன்றெனத் தோன்
றினும்
வேற்றுமை நயத்தின் வேறே யுடலுயிர்.

[உயிர்ப்பொருள்களின் குணப்பண்பு.]

சஙஉ. அறிவரு ளாசை யச்ச மான
நிறைபொறை யோர்ப்புக் கடைப்பிடி மையல்
நினைவு வெறுப்புவப் பிரக்கநாண் வெகுளி
துணிவழுக் காறன் பெளிமை யெய்த்தல்
துன்ப மின்ப மிளமை மூப்பிகல்
வென்றி பொச்சாப் பூக்க மறமதம்
மறவி யினைய வுடல்கொ ளுயிர்க்குணம்.

[உயிர்ப்பொருள்களின் றொழிற்பண்பு.]

சஙந. துய்த்த றுஞ்ச றொழுத லணிதல்
உய்த்த லாதி யுடலுயிர்த் தொழிற்குணம்.

[உயிரல்பொருள்களின் குணப்பண்பு.]

சஙச. பல்வகை வடிவிரு நாற்றமை வண்ணம்
அறுசுவை யூறெட் டுயிரல்பொருட் குணம்.

[இருபொருள்களுக்கும் பொதுவாகிய
தொழிற்பண்பு.]

சஙரு. தோன்றன் மறைதல் வளர்தல் சுருங்கல்
நீங்க லடைத னடுங்க லிசைத்தல்
ஈத லின்னன விருபொருட் டொழிற்குணம்.

[ஒருகுணந் தழுவிய உரிச்சொல்.]

சஙசு. சால வுறுதவ நனிகூர் கழிமிகல்.

[பலதுணந்தழுவிய உரிச்சொல்.]

சருஎ. கடியென் கிளவி காப்பே கூர்மை
விரையே விளக்க மச்சஞ் சிறப்பே
விரைவே மிகுதி புதுமை யார்த்தல்
வரைவே மன்றல் கரிப்பி னாகும்.

[ஒருதுணந்தழுவிய உரிச்சொல்.]

சருஅ. மாற்றநுவற்சிசெப்புரைகரைநொடியிசை
கூற்றுப் புகறன் மொழிகிளவி விளம்பறை
பாட்டுப் பகர்ச்சி யியம்பல் சொல்லே.

சருகூ. முழக்கிரட் டொலிகலி யிசைதுவை பிளிறு
இரக்கழுங் கியம்ப விமிழ்குளி றதிர்குரை [றிரை
கனைசிலை சும்மை கவ்வை கம்பலை
அரவ மார்ப்போ டின்னன வோசை.

[இவ்வியலுக்குப் புறனடை.]

சகூ0. இன்ன தின்னுழி யின்னண மியலும்
என்றிசை நூலுட் குணகுணிப் பெயர்கள்
சொல்லாம் பரத்தலிற் பிங்கல முதலா
நல்லோ ருரிச்சொலி னயந்தனர் கொளலே.

[இவ்வதிகாரத்திற்குப் புறனடை.

௪௬௧. சொற்றொறு மிற்றிதன் பெற்றியென் றனை
முற்ற மொழிகுறின் முடிவில வாதலிற் [த்து
சொற்றவற் றியலான் மற்றைய பிறவும்
தெற்றென வுணர்த றெள்ளியோர் திறனே.

[இந்நூலிற்குப் புறனடை.]

௪௬௨. பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே.

உரியியன் முற்றிற்று.

சொல்லதிகார முற்றிற்று.

நன்னூல்முற்றுப்பெற்றது.